www.padippakam.com

NR 277

# காகம்

## Kakam



மழை.
அது நின்றுபோயிற்று.
சாரளத்துக் கண்ணாடியிலும்
முற்றத்துப் பலா இலைகளிலும்
வேலியில் குந்திய குருவியின்
கன்னத்திலும்
மழையின் துளிகள் குந்தியிருந்தன.
ஆனாலும்.....
முடிந்த அந்த மழையின் இரைச்சல்
என் நெஞ்சுள் கிடக்கிறது,
இவளின் அழுகைபோல!

.....முல்லையூரான்...

(4) April 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

## முகம்

### ஒழித்தல்

**காகம்** சஞ்சிகைக்கு வாசகர்கள் எழுதும் கடிதங்களுக்கும் தொலைபேசி மூலமாக கருத்துக்கள் தெரிவிப்பவர்களுக்கும் முதலில் நன்றி சொல்லிக்கொள்ளவேண்டும். இவர்கள் சஞ்சிகைமீது காட்டும் அக்கறைக்காகவும், அவர்களது அபிப்பிராயங்கள் சஞ்சிகையில் வெளிவருவதனூடாக படைப்பாளிகளுடனான இருவழித்தொடர்பொன்றைப்பேணுவதன் அவசியத்தை உணராமல் இல்லை. அவ்வாறு உணரப்பட்டாலும் " வாசகர் பகுதி " என்பதனை இதுவரை இடம்பெறாமல் தவிர்த்து வந்தமையை சிலர் சுட்டிக்காட்டியிருந்தனர். அதுதொடர்பாக காகத்தின் நிலையை விளக்குவதன் நோக்கமாகவே இப்பகுதியை எழுதவேண்டி ஏற்பட்டுள்ளது.

படைப்பாளிகளையும் வாசகர்களையும் சந்திக்கச்செய்யும் ஒரு ஊடகமாக பத்திரிகைகள் இடம்வகிக்கின்றன. படைப்பாளியினுடைய கருத்துக்கள்பற்றி வாசகனுடைய மறு பிரதிபலிப்புப் பற்றிய தேடல் ஒன்றுக்காகவே வாசகர் பகுதிகளை பத்திரிகைகள் உள்ளடக்குகின்றன. ஆனாலும் மரபுவழியாக பின்பற்றப்பட்டுவரும் இந்த அணுகுமுறைக்குள்ளாகவன்றி வேறுமுறைகளில் இந்த வாசகர்களுக்கும் படைப்பாளிகளுக்குமிடையிலான இருவழித்தொடர்பை பேணமுடியாதா?



படிப்பகம்

www.padippakam.com

என்கின்ற கேள்விக்கு விடைகாண முயன்றபோது காகத்திற்கு வரும் அபிப்பிராயங்களை சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு பதிலாக வாசகர்களது கருத்துக்களை தணிக்கை இருட்டடிப்பின்றி அவர்களது அபிப்பிராயம் சம்பந்தப்பட்ட படைப்பாளியிடம் உடனுக்குடன்தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அத்துடன் காகம் சஞ்சிகை தொடர்பான பொதுவான கருத்துக்களாக இருப்பின் அவை அக்கறையோடு ஆராயப்பட்டு ஏற்ற திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

ஆகவே வாசகர் கடிதங்களை பிரசுரிப்பதன் நோக்கங்களை கவனத்திலெடுப்போமாயின் அதன் மைய நோக்கங்களை காகம் நிறைவேற்றி வருகிறது.

இதன்காரணமாகவே வாசகர் பகுதியை இதுவரை தாங்கிவராமைக்கான காரணமாகும். பிரசுரத்திற்கன்றி காகத்தின் உண்மையான வளர்ச்சிபற்றி அக்கறைகொள்ளும் வாசகர்களாகிய நீங்கள் தொடர்ந்தும் உங்கள் அபிப்பிராயங்களை தெரியப்படுத்திக்கொண்டிருப்பீர்கள் என காகம் நம்புகின்றது.

அத்துடன் காகத்தில் வெளிவந்த படைப்புச்சம்பந்தமாக வாசகர்களின் கருத்துரீதியான மறுதலிப்புக்களோ அன்றி அது சம்பந்தமான மேலதிக தகவல்களோ வாசகர்களிடமிருந்து பெறப்படுமிடத்து அவை தக்க கவனத்துடன் ஆராயப்பட்டு தக்க தகுதியை அது பெறும்போது அவை பிரசுரிக்கப்படும் வாய்ப்பு உண்டு என்பதனையும் இங்கு காகம் உறுதியளிக்கின்றது.

தற்கால தமிழ் பத்திரிகை உலகில் காணப்படும் பலவிதமான போலித்தனங்களை தொடர்நிலையாக காகமும் பின்பற்றவிரும்பவில்லை என்பதனை நீங்கள் உணர்வுரீதியாக உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என நம்பலாம். ஏதோ ஒரு வகையில் சார்ந்தும், விலகியும் அகநிலைக்குள்ளால்.... உணர்ச்சிநிலைதழுவிய வானத்தை வில்லாக்கும் முயற்சியின்றி வாழ்வை படைப்புகளினூடாக தரிசிப்போம். காகம் ■



உள்ளே.................


| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 9 | ஆதவனின் பார்வையில்..... |
| 11 | மண்ணுக்குள் நினைவு. |
| 12 | மலர்தல் வாடல் தெரிதல் |
| 14 | விவாதம் |
| 15 | இளைஞர் பக்கம் |
| 16 | மனதோடு பேசுதல் |
| 18 | அறியாமை இருள் |
| 23 | பிரக்ஞை – சிறுகதை |
| 25 | நிகழ்வு – சிறுகதை |
| 29 | தாய்மொழி தமிழா? |


தோப்புக்கரணங்கள் தொடர் இந்த இதழில்இடமின்மையால் இடம் பெறவில்லை...மன்னிக்க!..காகம்

**கிடைத்ததும்**
**பார்த்ததும்.........................**

"தமிழீழத்தின் நிகழ்வுகளுடன் டென்மார்க்கில் நடைபெறும் நிகழ்வுகளுடனும் ஒரு ஒளிநாடாச்சித்திரம்"

என்ற ஒரு முற்குறிப்போடு "விடியலைத்தேடி" என்ற ஒரு தொலைக்காட்சிப் படம் ஒன்றினை அதன் கதை,வசனம், நெறியாள்கை பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு வெளியிட்டுள்ள திரு.சு.தி.அருள் என்பவரிடமிருந்து பார்க்கும் வாய்ப்புக்கிடைத்தது. அவரது முயற்சிகள் வளரட்டும்

....காகம்.......

படிப்பகம்

www.padippakam.com

# H.C.ANDERSENனின்

## கதை

தமிழில்: திரு. சி.கருணாகரன்

## இரண்டு Clausகள்...........................

(சென்றஇதழின் தொடர்ச்சி)



*Andersen Hans Christian, (2.4.1805 – 4.8.1875 ) .ஐரோப்பிய இலக்கிய உலகில் 1800 களின் தலைசிறந்த கவிஞராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். கவிதைகள், கற்பனைக்கதைகள், கதைகள்,பயணஅனுபவங்கள், வாழ்க்கைக்குறிப்புகள், என தனது இலக்கியங்கள் மூலமாக எழுத்துலகில்பிரகாசித்தவர். பிறப்பால் இவர் ஒரு டனிஸ் சமூகத்தவராக இருந்தாலும்: இவரது படைப்புக்கள் உலகின்125மொழிகளில்மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.தமிழில்......?*

விவசாயி ஓ! என்று கூச்சலிட்டுக்கொண்டுகூறினார்."அது மிகவும் அருவருப்பாக இருக்கும், உனக்குத்தெரிந்திருக்கவேண்டும் எனக்கு ஆசிரியனைக்காண்பது பிடிக்காது என்று. ஆசிரியனும் பிசாசும் ஒன்றே. அது என்னைக்கேலிசெய்யக்கூடாது "

சின்னக்கிளவுஸ் " நான் மந்திரவாதியைக் கேட்டுப்பார்க்கிறேன் என்று கூறிக்கொண்டே தனது பையின் அருகில் காதைவைத்தான்."அவன் என்னசொல்லுகிறான் என்று " வினவினார் விவசாயி.

" அவன்கூறுகிறான் அந்தமூலையில் இருக்கும் இரும்புப்பெட்டிக்குள் பிசாசைக்காணலாமாம்" என்றான் சின்னக்கிளவ்ஸ்.

" இரும்புப்பெட்டியில் இருக்கும் பிசாசைப் பார்க்கும்போது அது தப்பித்துக்கொள்ளாமல் மூடியைப்பிடிக்க நீங்கள் உதவுவீர்களா " என்று விவசாயி வினவினார்.மெல்ல திறக்கப்பட்ட பெட்டியினூடாக பார்த்த அவர் "அது எங்கள் ஆசிரியர்போல் இருக்கிறது" என்றுகூறி அச்சப்பட்டார்.

அவர்கள் அந்த இரவுமுழுவதும் குடித்துக்கொண்டிருந்தார்கள்."அந்த மந்திரவாதியை எனக்கு விற்றுவிடு"என்றார் விவசாயி. அதற்காக உனக்கு எவ்வளவு பணம்வேண்டும்? என்றும் வினாவினார்.

"உனக்கு உடனடியாக ஒருபெட்டி நிறைய காசு தருகிறேன்" என்று மேலும் தொடர்ந்தார். "இல்லை. அது என்னால் இயலாது. யோசித்துப்பார்....இந்த மந்திரவாதியால் எனக்கு எவ்வளவு பயன் உண்டு என்று" என்று கூறினான் சின்னக்கிளவ்ஸ்'. அதற்கு விவசாயி "அது எனக்கு கண்டிப்பாக தேவைப்படுகிறது தயவாகத்தந்துவிடு" என்று மீண்டும் மீண்டும் பணிவாக வேண்டிக்கொண்டார்.

இறுதியாக இணங்கிய சின்னக்கிளவ்ஸ் "நீ என்னை இரவு தங்குவதற்கும் அனுமதித்திருக்கிறாய்,ஆகவே நான் உனக்கு மந்திரவாதியை தர ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நீ எனக்கு பெட்டிநிறைய பணம் தரவேண்டும்" என்றான். "நான் உனக்கு பெட்டிநிறைய பணம் தருகிறேன் ஆனால் நீ அங்கிருக்கும் இரும்புப் பெட்டியையும் எடுத்துச்செல்லவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

அந்தப்பெட்டியினை இன்னும் ஒரு மணித்தியாலம்கூட அனுமதிக்கமுடியாது.அதற்குள் இன்னும் அந்தப்பிசாசு இருக்கிறதா,இல்லையா என்பதுகூட எனக்குத் தெரியாது!"என்று விவசாயி கூறினார்.சின்னக்கிளவ்ஸ் தன்னிடமிருந்த குதிரைத்தோல் பையை விவசாயியிடம் கொடுத்தான். அதற்காக அவன் பெட்டிநிறைய பணத்தை பெற்றுக்கொண்டதுடன் இரும்புப்பெட்டியை எடுத்துச்செல்வதற்காக ஒரு தள்ளுவண்டியையும் கொடுத்தார். பணப்பெட்டியையும், ஆசிரியர் ஒழித்திருக்கும் இரும்புப்பெட்டியையும் எடுத்துக்கொண்ட சின்னக்கிளவ்ஸ் விடைபெற்றுச் சென்றான். அவன் போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது.அதில் தண்ணீர் சூறாவளி வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது.அதில் ஒருவர் தவறிவிழுந்தால் உயிர்தப்புவது என்பது சாத்தியமற்றது. பெட்டிக்குள் இருக்கும் ஆசிரியருக்கு கேட்கும்வண்ணம் சின்னக்கிளவ்ஸ் பின்வருமாறு உரத்துக்கூறினான். "இந்தஇரும்பால் செய்யப்பட்டபெட்டி என்னகனம் கனக்கிறது? இதனை என்னால் தொடர்ந்தும் காவிச்செல்லமுடியாது.இதனை நான் இந்த ஆற்றில் எறிகிறேன். அது நீந்தி என்வீட்டுக்குவந்தால் நல்லது,வராவிட்டாலும் பாதகமில்லை" என்று கூறியவாறே அந்த இரும்புப்பெட்டியை ஒருகையால் மெல்லத்தூக்கினான்.

"ஓ! நிறுத்து" என்று இரும்புப்பெட்டிக்குள் இருந்த ஆசிரியர் அலறினார்.மேலும் "நான் வெளியே வர உதவிசெய்" என்றும் வேண்டினார்.குரலைக்கேட்டு சின்னக்கிளவ்ஸ் பயந்ததுபோல பாசாங்கு செய்தான்."நான் உன்னை ஆற்றில் தள்ளிவிடுகிறேன்.அதில் நீ மூழ்கி செத்துப்போ!" என்றும் கூறினான்."இல்லை.....இல்லை அப்படிச்செய்துவிடாதே; உனக்கு ஒருபெட்டி நிறையப்பணம் தருகிறேன்" என்றார் ஆசிரியர்."ஓ! அப்படியா சங்கதி" என்றபடி சின்னக்கிளவ்ஸ் இரும்புப்பெட்டியை திறந்தான்.வெளியே வந்த ஆசிரியர் அந்த வெறும் இரும்புப்பெட்டியை தண்ணீரில் வீசிவிட்டு அவனை வீட்டுக்கு அழைத்துச்சென்று ஒருபெட்டிநிறைய பணத்தினை கொடுத்தார்.அவனிடம் ஏற்கனவே ஒருபெட்டிநிறைய பணம் இருந்தது. இப்போது தள்ளுவண்டி முழுவதும் பணமாகி விட்டது."பாருங்கள்....! இந்த ஒருகுதிரையின் விலை எவ்வளவு என்று" இவ்வாறு சின்னக்கிளவ்ஸ் தனக்குள் கூறிக்கொண்டான். வீட்டிற்கு வந்ததும் பணம் முழுவதனையும் வீட்டிற்குள் கொட்டி விட்டு பணப்பெட்டியின் அளவை அளக்கும் அளவுகருவி ஒன்றினை பெரியகிளவ்ஸிடம் வாங்கி வருமாறு ஒரு பையனை சின்னக்கிளவ்ஸ் அனுப்பினான்.இவ்வாறு அவன் அனுப்பியதன் நோக்கம் தான் ஒருகுதிரையினி மூலம் இவ்வளவு பணத்தை பெற்றுக்கொண்டதை பெரியகிளவ்ஸ் இற்கு தெரிவிப்பதன்மூலம் அவனைஎரிச்சல் அடையச்செய்வதற்காகவாகும்.அளவுகருவியை கொடுக்கும்போது அதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் அளவுகருவியை கொடுத்த பெரிய கிளவ்ஸ் பின் அதைப்பெற்றுக்கொள்ளும்போது அந்த அளவுகருவியில் ஒட்டப்பட்டிருந்த செப்பு நாணயங்களை கண்டதும் "இது என்ன ?"என்று திகைத்துப்போய் சின்னக்கிளவ்ஸினைப்பார்த்து "உனக்கு எங்கிருந்து இவ்வளவு பணம் கிடைத்தது?"என்று கேட்டான். இது என்னுடைய குதிரைத்தோல் விற்றபணம்" என்றான் சின்னக்கிளவ்ஸ். "ஒருகுதிரைத்தோலுக்கு இவ்வளவு பணமா?" என்று வினவிய பெரியகிளவ்ஸ் வீட்டைநோக்கிச்சென்று ஒருகோடாலியை எடுத்து தனது நான்கு குதிரைகளையும் கொன்று அவற்றின் தோல்களை எடுத்துக்கொண்டு நகரத்திற்கு விரைந்தான்.

" தோல்.....தோல்.....யார் வாங்கப்போகிறீர்கள்" என்று வீதி முழுவதும் கூவினான். அங்கிருந்த எல்லாச்சப்பாத்துக் கடைக்காரர்களும் விரைந்தோடிவந்து அவற்றின் விலைகளை விசாரித்தனர். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருபெட்டி பணம் தரும்படி கூறினான்.

"பெரியகிளவ்ஸ்! உனக்கு என்ன பைத்தியமா ? என்று எல்லோரும் கேட்டனர். நீ நினைக்கிறாயா எங்களிடம் பெட்டிக்கணக்காக பணம் இருப்பதாக? என்றும் வினவினர். அவன் மீண்டும்



படிப்பகம்

www.padippakam.com

"தோல்...தோல்......என்று கத்தினான். கேட்பவர்கள் எல்லோருக்கும் ஒருபெட்டி காசு தரும்படி கூறினான்."இவன் எங்களை கேலிசெய்கிறான் "என்று எல்லோரும் கூறினர்.
சப்பாத்துக்கடைக்காரர்கள் தங்களது ஆயுதங்களையும் தோல்பதம்படுத்துபவர்கள் தங்கள் குத்தூசிகளையும் எடுத்துக்கொண்டு பெரியகிளவ்சை தாக்கமுற்பட்டார்கள்."தோல்.....தோல் என்று கத்தி அவனைக்கேலிசெய்து உடனடியாக நகரைவிட்டு வெளியேறு "என்று அவனை விரட்டினர். அவன் இவ்வாறு முன்னர் எப்போதும் அடிவாங்கியது இல்லை. கொதிப்புடன் வீட்டுக்கு வந்த அவன் இதற்கு நான் பதிலடிகொடுக்கவேண்டும் என்று எண்ணி சின்னக்கிளவ்சை கொலைசெய்வதாக முடிவுசெய்தான்.
சின்னக்கிளவ்ஸ் இன் வீட்டில்அவனது பாட்டி மரணம் அடைந்தாள். அவளிடம் நிறையச்சொத்துக்கள் இருந்தபோதும் அவனை நன்றாக பராமரிக்கவில்லை. அப்படி இருந்தபோதிலும்அவளை தன்னுடைய கட்டிலில் படுக்கவைத்து இரவுமுழுவதும் தான் வீட்டு மூலையில்இருந்த கதிரையில் உறங்கினான். அவ்வாறு கோடாலியுடன் வந்த பெரியகிளவ்ஸ் சின்னக்கிளவ்ஸ் வழமையாகப்படுக்கும் இடத்திற்கு வந்து கட்டிலில் படுத்திருந்த பாட்டியின் தலையில் கோடாலியால் தாக்கிவிட்டு "நீ இனிமேல் என்னை கேலிசெய்யமுடியாது" என்றுகூறிக்கொண்டே வீடு சென்றான். அதை அறிந்த சின்னக்கிளவ்ஸ் "இவன் எவ்வளவு கொடியவனாக இருக்கிறான் !என்னைக்கொலைசெய்ய அல்லவா முயன்றிருக்கிறான் . பாட்டி முன்னரே இறந்திருந்தது நல்லதாகிவிட்டது. இல்லையெனில் அவளையல்லவா கொன்றிருப்பான் என்று தனக்குள் வருந்திக்கொண்டான்.தன்னுடையபாட்டிக்கு அழகாக உடுத்து பக்கத்துவீட்டில் ஒரு குதிரைவண்டிலை கடனாகப்பெற்று அவ்வண்டியின் கதிரையில் விழாமல் நன்றாக பின்பக்கமாக சாய்த்துவைத்து காட்டுவழியாகச் சென்றுகொண்டிருக்கும்போது பசியேற்பட்டதால் சாப்பாட்டுக்கடை ஒன்றைக்கண்டதும் அவ்விடத்தில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றான்.
சாப்பாட்டுபக்கடைக்காரன் பெரிய பணக்காரனாகவும் அதேவேளை நல்லவனாகவும் இருந்தான். ஆனால் அவனில் எப்போதும் புகையிலை நாற்றம் வீசும். "காலைவணக்கம்" என்று கூறிக்கொண்டு உள்ளே வந்த சின்னக்கிளவ்ஸைப்பார்த்து "எங்கே இவ்வளவு நன்றாக உடைஉடுத்துக்கொண்டு காலையில்கிளம்பிவிட்டாய்" என்றுகேட்டான்.நான் என்னுடைய பாட்டியுடன் நகரத்திற்குப்போகிறேன் வெளியில் அந்த வண்டியில் இருக்கிறாள். அவளால் இங்கே வரமுடியாது. உன்னால் ஒருகிளாஸ் பழரசம் கொண்டுபோய் கொடுக்கமுடியுமா? அவளுக்கு பெரிதாக காதுகேட்காது. நீ நன்றாக உரத்துக்கதைக்கவேண்டும்" என்றான் சின்னக்கிளவ்ஸ் நான் அவ்வாறே செய்கிறேன் என்றுகூறி பழரசத்தை எடுத்துக்கொண்டு அவன் வண்டில் நின்ற இடத்திற்கு வந்து "இதோ ஒருகிளாஸ் பழரசம் உன்பேரன் அனுப்பியது" என்று கொடுக்க அவள் எந்தப்பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.அவன் மீண்டும் தன்னால் முடிந்தளவு உரத்துக்கத்தி "இந்தா ஒரு கிளாஸ் பழரசம்" என்றான்.அப்போதும் அவள் மௌனமாக இருக்க கோபமடைந்த சாப்பாட்டுக்கடைக்காரன் பழரசத்தை அவளின் முகத்தில் வீசினான். வீசப்பட்ட பழரசம் அவளின் மூக்குவழியாக வழிந்தது.கட்டிவைக்கப்படாத அவள் வண்டியில் ஒருபக்கமாக சரிந்துவிட்டாள்."இது என்ன என்று கத்திக்கொண்டு வந்த சின்னக்கிளவ்ஸ் "நீ என் பாட்டியை கொன்றுவிட்டாய் அவளின் நெற்றியில் காயமிருக்கிறது"என்றுகூறி கடைக்காரனின் சட்டையை பிடித்துக்கொண்டான். "ஓ! இது துரதிஸ்டவசமாக நிகழ்ந்துவிட்டது. எல்லாமே என் முற்கோபம்தான் காரணம். நான் உனக்கு ஒரு பெட்டி பணம் தருகிறேன். உன் பாட்டி எனக்கும் பாட்டிதான். நானே அவளை அடக்கம்செய்கிறேன்.நீ இதை எவருக்கும் சொல்லக்கூடாது.யாரும் அறிந்தால் என்தலையை எடுத்துவிடுவார்கள்." என்றான்.



படிப்பகம்

www.padippakam.com

சின்னக்கிளவ்ஸ் பெட்டிநிறைய பணம் பெற்றான். கடைக்காரன் பாட்டியை அடக்கம்செய்தான்.பெட்டிநிறைய பணத்துடன் வந்த சின்னக்கிளவ்ஸ் உடனடியாக அளவுகருவியை வாங்கிவரும்படி தன்னுடைய பையனை பெரியகிளவ்ஸிடம் அனுப்பினான்.
"என்ன அது! என்று ஆச்சரியத்துடன் கேட்ட பெரியகிளவ்ஸ் "நான் அவனையல்லவா கொன்றுவிட்டேன் " என்றான்.நானே நேரில் போய் பார்க்கவேண்டும் என்றபடி அளவுகோலை எடுத்துச்சென்றான்.எங்கிருந்து இவ்வளவு பணத்தையும் பெற்றாய் என்றுகேட்டான் பெரியகிளவ்ஸ்.
" நீ என்னையல்ல என் பாட்டியையே கொன்றாய். நான் அவளை ஒருபெட்டி பணத்திற்கு விற்றுவிட்டேன். "நிறையப்பணத்தை அதற்கு பெற்றுக்கொண்டாயே" என்றுகூறிய பெரியகிளவ்ஸ் அக்கணமே வீடுசென்று ஒரு கோடாலியை எடுத்து மிகவேகமாக தனத பாட்டியை கொலைசெய்து ஒரு வண்டியில் வைத்து ஓட்டிக்கொண்டு நகரத்தைநோக்கி விரைந்தான்." ஒரு இறந்த உடலை வாங்குவீர்களா" என்று அங்கு வாழ்ந்த ஓர் மருந்து விற்பவனை வினவினான்." யார் அது? எங்கேயிருந்து அதனைப்பெற்றுக்கொண்டீர்கள்" என்று அவன் கேட்டான்." இது என்னுடைய பாட்டி. நான் அவளை ஒருபெட்டி பணத்திற்காக கொலைசெய்திருக்கிறேன் என்றான் பெரியகிளவ்ஸ்."கடவுளே எங்களைக்காப்பாற்றிக்கொள்ளும்" என்ற அந்த மருந்துவியாபாரி "நீ பைத்தியம் போல் கதைக்கிறாய்.இவ்வாறு கதையாதே. அதனால் உன் தலைக்கே ஆபத்து வந்துவிடும். என்றும் அவன் செய்த காரியம் எவ்வளவு வேதனையான ஒன்று, அவன் எவ்வளவு தீய மனிதன்,அவனுக்கு அதற்கு தண்டனை வழங்கப்படவேண்டும் என்று உண்மையை அவனுக்கு விளக்கிக்கூறினான்.அதைக்கேட்ட பெரியகிளவ்ஸ் திகைத்து தனது வண்டியில் பாய்ந்து ஏறி குதிரைகளை சவுக்கால் விரட்டி அவ்விடத்தைவிட்டு வீடுநோக்கி விரைந்தான். அவன் பைத்தியமாய் இருக்கிறான் அதனால் மனம்போனபோக்கில் குதிரையை ஓட்டுகின்றான் என்னு அந்த மருத்துவனும் மற்றவர்களும் கதைத்தனர்.
அவன் தனது ஊர்வழியாக வரும்போது "இதற்காக நன்றாக வாங்கிக் கட்டுவாய்.ஆம் நன்றாக வாங்குவாய்" என்று பெரியகிளவ்ஸ் சொல்லிக்கொண்டான்.
வீட்டிற்கு விரைந்து சென்று ஒரு பெரியசாக்கொன்றை எடுத்துக்கொண்டு சின்னக்கிளவ்ஸிடம் சென்றான்." இப்போது திரும்பவும் என்னை ஏமாற்றிவிட்டாய்.முதலில் எனது குதிரைகளை அடித்துக்கொன்றேன்.பின்பு எனது வயதானபாட்டியை கொன்றேன். இவையெல்லாம் உன்னால்தான் நிகழ்ந்தது.ஆனால் இனிமேல் என்னை ஏமாற்றமுடியாது." என்றான் பெரியகிளவ்ஸ்.
சின்னக்கிளவ்ஸின் வாழ்க்கையையே முடிப்பதற்கு அவனை தனது சாக்கில் போட்டுக்கொண்டு "இப்பொழுது உன்னை நான் வெளியில் எடுத்துச்சென்று மூழ்கடிக்கப்போகின்றேன்" என்று அந்த சாக்குமூட்டையை பிடித்துக்கொண்டு கத்தினான்.

(அடுத்தஇதழில் நிறைவுபெறும்)





படிப்பகம்

www.padippakam.com

# ஆதவனின் *பார்வையில்*

**சினிமா**

வணக்கம்!

வாசகர்களே! சில ஆண்டுகள்(flash back) பின்னோக்கிச் செல்லலாம் வாருங்கள்.1978,79 காலப்பகுதிகளில் தமிழ் தினசரிகளில் ஒரு விளம்பரம் பெரிதாகக் காணப்பட்டது. அந்த விளம்பரம் இதுதான்:

**பொன்மணி - இது உங்கள் மகளின் கதையாகவும் இருக்கலாம்.**

இந்த விளம்பரமே ஒரு நல்ல அர்த்தத்தைக் கொடுத்தது. ஒரு நல்ல கவனத்தைத் துண்டியது. "கலைப்படம்" என்று கருதுமளவிற்கு இலங்கைத் தமிழ்ச் சினிமாவில்- ஒரு புதிய தொடக்கத்தை அந்த திரைப்படம் வலியுறுத்தியது.

சாதி எதிர்ப்பையும் மதக்கொடுமைகளையும் சீதன எதிர்ப்பையும் தனது மையக்கருவாகக் கொண்ட கதையமைப்பும், யாழ்ப்பாணத்து மண்வாசனையும் கொண்ட அந்த திரைப்படம்,, படுதோல்வியைத் தழுவியது.

எனது மக்கள் எப்பொழுதும் போலவே, நல்லவற்றைக் காண மறுத்து விட்டார்கள். சிங்கள மாணவர்களும், தமிழ் மாணவர்களும் சேர்ந்து ஒருகாலத்தில் யாழ்-பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார்கள். அப்பொழுது விரிவுரையாளராகக் கடமையாற்றிய தர்மசேன-பத்திராஜா என்கின்ற சிங்களவர்தான் யாழ்ப்பாணத்துக் கிடுகுவேலியையும்.... முனியப்பர் கோயிலையும்.... மொச்சை மணக்கிற ஆட்டுக்கொட்டிலையும்.... சைக்கிளில் சமாந்தரமாய் நடுரோட்டில் சென்று நியாயம் புழக்குவதையும்... யாழ்ப்பாணத்துக்கே சொந்தமாகிப் போய்விட்ட பிரித்தானியக் காலனித்துவத்தின் எச்சசொச்சமான A-40காரையும்... செல்லச்சந்நதி கோயிலையும்... பண்ணைக் கடற்கரையையும் யாதார்த்தத்துடன் திரையில் காட்டினார்.

காவலூர் ராசதுரையின் கதையை தர்மசேன பத்திராஜா இயக்கினார். தர்மசேன பத்திராஜா மிகவும் புகழ்பெற்ற நல்லசிங்கள இயக்குநர் ஆவார். அவரது திறமைபற்றி பின்னர் எழுதுகின்றேன். "பொன்மணி"யில் நடித்தவர்கள் யார் தெரியுமா? பேராசிரியர் கைலாசபதியின் மனைவி சர்வமங்களம், கலாநிதி சி. மௌனகுருவும் அவர் மனைவி சித்திரலேகா, கலாநிதி நந்தி முதலியோர்.

இந்தத் திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியை லண்டனில் இருந்துவரும் "Framework" (37) என்ற சினிமாச் சஞ்சிகை தன் அட்டைப்படமாக போட்டுள்ளது. இந்தப் படம் தோல்வியைத் தழுவியமைக்கு விமர்சகர்கள் பல கருத்துக்களைச் சொல்கிறார்கள்.

K.S.சிவகுமாரன் இதனது கதையமைப்பு சரியில்லை என்கிறார். அதாவது திரைக்கு மாற்றுகிற தன்மையைக் கொண்டதல்ல என்கிறார். (Kavaloor Rajadurai is an important short story writer in this country but his stories, which have very few incidents, do not easily transfer to the screen. - Framework - 37 page -46)

கதையை எழுதிய காவலூர் ராசதுரையோ இந்தப்படம் தோல்வியுற்றதற்கு மூன்று காரணங்களை சொல்லுகிறார்.

1) பட விநியோகம் சரியாய் இல்லை.
2) அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்பின்மை
3) பொருளாதாரக்காரணிகளினால் படத்தைவாங்க யாரும் முன்வரவில்லை.(Framework-37 page 36)

யார் எதைச் சொன்னாலும் ஒன்று மட்டும் நான் உறுதியாகச் சொல்வேன். அன்று பொன்மணி



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தால்.... அல்லது எனது மக்கள் அதற்கு ஒரு உற்சாகத்தைக் கொடுத்திருந்தால்.... இலங்கை தமிழ்ச் சினிமாவில் மேலும் நல்ல கலைத் தரமான படங்கள் வந்திருக்கும்.

நான் அப்போது பேராதனைப் பல்கலைக்கழக film clubல் அங்கத்தவனாய் இருந்தேன். அந்தக் காலத்தில் பேராதனையில் "தமிழ்ச்சங்கம்" இருந்தது.(இப்பவும் இருக்கின்றது.) தமிழ்ச்சங்கம் நடத்துகிற நிகழ்ச்சிகளுக்குத்தான் மாணவர்கள் அதிகமாகப் போவார்கள். தமிழ்ச்சங்கத்தின் தலைவர் ஒரு சிவாஜிப் பிரியர். பேராதனைப் பூங்காவில் மாலினி பொன்சேகாவுடன் கட்டிப் புரள்வதற்காக– இலங்கை இந்தியக் கூட்டுத்தயாரிப்பான "பைலட் பிரேம்நாத்" படப்பிடிப்புக்காக சிவாஜி வந்திருந்தார். சிவாஜியைத் தமிழ்ச்சங்கத்தில் அழைப்பித்துப் பேச வைக்கவேண்டும் என்பது சங்கத்தலைவரின் ஆசை. ஆனால் எமது film club எப்போதோ முடிவு செய்து விட்டது. பொன்மணியை ஒரு குறிப்பிட்ட தினத்தில் காண்பிப்பது என்று. அதற்கென நாங்கள் ரிக்கற்றும் விற்றுவிட்டோம். இது இப்படி இருக்கையில் அதே தினத்தில், பூங்காவில் போய் சிவாஜியைக் கண்டு தமிழ்ச்சங்கத்துக்குச் சிவாஜி வருகிறார் என்ற புயலை தமிழ்ச்சங்கத் தலைவர் கிளப்பிவிட்டார்.
கடைசியில் சிவாஜியும் வரவில்லை. பொன்மணிக்கும் சனம் வரவில்லை.
இதுதான் (அ)இன்றைய இலங்கைச் தமிழ்ச் சினிமாவின் நிலை.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.
இவண் *க.ஆதவன்*

**பி.கு.: லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் பின்னிணைப்பாக உள்ளார். அத்துடன் ஈழமுரசு என்றொரு பத்திரிகை வாராவாரம் வருகிறது. அந்தப் பத்திரிகையில் யமுனா–ராஜேந்திரன் என்பவர் சினிமா பற்றி மிகத்திறமையாக பலருக்கும் பயன்படக்கூடிய விஷயங்களை எழுதிக்கொண்டிருக்கிறார். மூன்றாம் உலகசினிமாபற்றி.. அவரிடம் கேட்டுப்பெறுவதற்கு நிறையவிஷயங்கள் இருக்கின்றன.

## லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ்(Lester James Peries)

1919ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம்திகதி கொழும்பில் பிறந்தார். 1939ஆம் ஆண்டுவரை கத்தோலிக்கபாதிரியார் பள்ளியில் கல்விகற்றார். இயக்குனரும் எடிட்டருமான சுமித்திரா குணவர்தனாவை விவாகம் செய்தார். 2ம் உலக யுத்தகாலத்தில் நாடகங்களிலும், இலங்கை வானொலி நாடக எழுத்தாளராகவும் பணியாற்றினார். 1946ம்ஆண்டு பெற்றோர்களினால் லண்டனுக்கு அனுப்பப்பட்டார்."The times of Ceylon"என்ற பத்திரிகையில் பணியாற்றுமாறு அழைக்கப்பட்டார். அக்காலகட்டங்களில் சிறு விவரணத் திரைப்படங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டார். 1952ம்ஆண்டு நாடுதிரும்பியபின் இலங்கை அரசாங்க திரைப்படக்கூட்டுத் தாபனத்தில் இணைந்தார். 1955 இல் புகைப்படக் கலைஞரான வில்லியம் பிளேக்(William Blake) என்பவருடனும், எடிட்டர் டைடஸ் தொடவத்த(Titus Thotawatta) என்பவருடனும் அரசாங்க கூட்டுத்தாபனத்திலிருந்து பிரிந்து தனது முதலாவது சிங்களப் படமான "ரேகாவ" (Rekava)என்ற படத்தை எடுத்தார். அந்தத்திரைப்படம் அவருக்கு பாரியதோல்வியை அளித்தது. 1960களில் இவரது மனைவியார் டைட்டஸ் தொட்டவத்தைக்குப் பதிலாக எடிட்டராக கடமையாற்றினார்.

### லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் திரைப்படங்கள்:

Soliloquy - 1949 குறும்படம்
Farewell to Childhood-1950 சிங்களநாட்டியம்.
Conquest in the dry zong - 1954
Be safe or be sorry - 1955
Rekava - 1956
Sandesaya - 1960
Too many too soon - 1961
Home from the sea - 1962
Forward into the future , Gamperaliya-1964
Delovak Athara - 1966
Ran Salu - 1967
Golu Hada Watha - 1968
Steel, Akkara Paha - 1969
40 Leagues from paradise, Nidhanaya -1970
Kandy Perahera - 1971
Desa nisa - 1972
The god king - 1975
Madol Duwa - 1976
Ahasin Polawatta - 1978
Pinhamy, Veera Puran Appu -1979
Baddegama - 1980
Kaliyugaya - 1982
Yuganthayo - 1983



படிப்பகம்

www.padippakam.com

## மண்ணுக்குள் நினைவுகள்

வேலணையூர் நவமகன்

அன்பு நண்ப,
மண்ணின் சோகங்களை எல்லாம்
மடலாய் எழுதி
தபாற் பெட்டிகளில் திணித்திருந்தாய்
எல்லாமே
என் இதயம் வரை
வந்து விழுந்தது

வரிகள் சிலதால்
வசை பாடியிருந்தாய்

"எல்லாவற்றையுமே மறந்துவிட்டாயா?"
என்றும்,
ஏக்கத்துடன் கேட்டிருந்தாய்.
மறந்து விடலாம்
எல்லாவற்றையுமே மறந்துவிடலாம்.

உன்னை, என்னை
நமது நட்பை
அதை வளர்த்த கல்லூரிகளை
நமதூரை
ஊரின் தெருக்களை
அது தேய்த்துக் கிழித்த
சையிக்கிள் ரயர்களை

கிளி பிடிக்க ஏறி
காற்சட்டை கிழித்த:
செத்தும் வீழாத
தலையில்லா பனையை.

நொச்சிக் காட்டிற்குள்
பட்ச்சி பிடிப்பதற்காய்
பதுங்கி,
கண்ணிகளை குத்திய சுடுமணலை,
சுடுமணலில் வெந்த
காலின் கொப்பளத்தை

ரியூசனுக்குப் போகும் பாதையில்
வீட்டுக்குத் தெரியாமலே
நீச்சல் கற்றுத்தந்த
அந்தக் குளத்தை.

நம் பள்ளித் தோழிகளை
அவர்களுக்கு
நாமிட்ட குசு குசு பெயர்களை
அதனால் வாங்கிக் கட்டிய
நெருப்பு வார்த்தைகளை

தமக்கைக்கு எழுதி
தங்கையிடம் கொடுத்தனுப்பி
தாயிடம் அகப்பட்ட
அக் காதற் கடிதத்தை

சிகரட்டின் உள் புகையை
யாருக்கும் தெரியாமல்
இழுத்துப் பார்ப்பதற்கு இதமாய்
இடமளித்த,
இலுப்ப மரக்கொப்பை

ஏன்...
கடைசியாக
நமது உதடுகள்
அடிக்கடி உச்சரித்துக் கொண்ட
அந்த இயக்கத்தின் பெயரை
எதைத்தான் முடியாது.
எல்லாவற்றையுமே மறந்துவிடலாம்.

எல்லாமே நிகழ்ந்த அந்த
மண்ணை மறக்க முடியுமானால்
மாத்திரம்,
எதைத்தான் முடியாது.
எல்லாவற்றையுமே
மறந்து விடலாம்.

~~~~~~~~




படிப்பகம்
~~~~~~~~

www.padippakam.com

# மலர்தல்
# வாடல்
# தெரிதல்

பூமி



'வித்தியாசங்களுடனேயே உலகம் – இதில்
ஒருவாறு ஒத்திருப்பவை குழுக்கள்.
முற்றத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும்
எறும்புகளுக்கிடையே அகப்பட்ட
ஒரு
தேங்காய்ப்பூப்போல..........ஒரு மனிதன்.
மலர்ந்தும்
வாடியும்
ஞானித்தும் கொண்ட....
ஒரு ஈழத்து அகதியின்
வடதுருவ அனுபவங்கள்.'

வீதிகள் சுத்தமாக இருந்தன. காற்றுத்தான் கஞ்சல்களை அள்ளித்திரிந்தது. இங்கு டென்மார்க்கில் வீதிகளில் பாதசாரிகளை விடவும் கார்களே அதிகமாக திரிந்தன. அதுவும் நான் இருந்த அகதிமுகாம் சுற்றுப்புறத்தில் பாதசாரிகளை காண்பது அரிது.ஒரு வீதியால் நடந்துகொண்டிருந்தேன். இன்னொரு பாதசாரி வலதுபக்கத்தால் நடந்துகொண்டிருந்தார். நான் இடதுபக்கத்தால் நடந்துகொண்டிருந்தேன். ஊரில் இப்படித்தானே நாம் நடந்து பழக்கப்பட்டவர்கள்.கார்கள் எல்லாம் எனக்கெதிராக வந்துகொண்டிருந்தன. எத்தனை தடவை ஞாபகப்படுத்தினாலும் இந்த நடைபாதைப்பழக்கத்தை என்னால் இலகுவில் மாற்றமுடியவில்லை. எதிரே ஒரு இராணுவ வாகனம் வருவது தெரிந்தது. என்னை அறியாமலே சற்று துரிதமானேன். பின்னால் திரும்பிப்பார்த்துக்கொண்டேன்.

பக்கத்தே இருந்த வயலில் வேலிகளைக்கடந்து ஒரு பற்றைக்குள் மறைந்து கொண்டேன். இராணுவ வாகனம் கடந்துசென்றபோதுதான் அதில் வெள்ளை ஆமிக்காரர்கள் இருப்பதைக்கண்டு எனக்குள் சிரித்துக்கொண்டு மீண்டும் வீதிக்குவந்தேன்.

ஊர்ஞாபகங்கள் துரத்திக்கொண்டு வந்தன.

என்னுள் அமிழ்ந்துபோய்கிடக்கும் பீதியை உணர்ந்தேன்.

ஒரு உயிரின் அடி ஆழத்தை துப்பரவு செய்துவைக்குமளவுக்கு இலங்கை பேரின இராணுவ நிகழ்ச்சிகள் நடந்தேறியுள்ளனவே என எண்ணி வாடினேன்.

இப்போது எனக்கு ஒன்றுமே இல்லை.....பயமின்றி உசாராக நடந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

எனது வயதான ஐயாவும், அம்மாவும் ஞாபகத்தில் வர நடை தானாகத் தளர்ந்தது.

ஊரும்,நானும் அதுவும் என்னுள் ஊர் இருக்குமளவும் இந்த ஆத்மாவிற்கு சந்தோசமில்லை என எண்ணியபடி நடந்தேன்.

ஏனெனில் அந்த ஊர் என்னோடு இல்லாததால்தான் இது இப்படியாயிற்று என்றபடி நடந்தேன்.

அந்த எனது ஊரோடு மெல்லமெல்ல சேர்ந்ததன் அடையாளங்களே இன்றும் என்னுள் எஞ்சியுள்ளன.

இவைதான் தேசிய இன அடையாளங்களோ........

பொழுது விழுந்தது......எப்போதும்போல.

இன்று தொலைக்காட்சியில் உதைபந்தாட்டம். அதுவும் டென்மார்க்கும் யேர்மனியும் உலகக்கிண்ணத்திற்கான இறுதி ஆட்டம். முகாம் அவதியாகச் சாப்பிட்டு முடித்து தொலைக்காட்சி மண்டபத்தில் கூடிவிட்டது.

ஆட்டமும் ஆரம்பித்துவிட்டது.

ஆட்டம் விறுவிறுப்பாக பார்த்துக்கொண்டிருந்த தமிழர்கள் இரண்டு கன்னையானார்கள்.

ஒரு சாரார் டென்மார்க்கிற்கு ஆதரவாகவும்............

மறுசாரார் (யேர்மனியில் பலகாலம் வாழ்ந்துவிட்டு மீண்டும் வசதிகருதி டென்மார்க்கிற்கு இரவோடு இரவாக எல்லைகளை கடந்தவர்கள்.)

யேர்மனிக்கு ஆதரவாகவும் விசில், கைதட்டல், அபிப்பிராயங்கள்.....போனறவற்றால் தமது ஆதரவினைக்காட்டி மகிழ்ந்திருந்தனர்.

இந்த ஆரவாரமே சற்றுநேரத்தில் கதிரைகளை தூக்குமளவிற்கு முற்றியது.

அந்த மண்டபத்தில் இனவேட்கை நிறைந்திருந்தது.

தொலைக்காட்சியில் அவர்கள் பந்துவிளையாடிக்கொண்டிருந்தனர்.

எனக்கு இந்த தமிழர்களை பார்க்க மலர்தலும் வாடலும் தெரிதலும் மறந்து மரமானேன்.

மைதானத்தில் பந்து அந்த மண்டபத்துள் நான்.

உண்ணிகள் நிறைந்த கோழிக்கூட்டுக்கு பக்கத்திலுள்ள கொய்யாமரத்திலுள்ள குருவிச்சை ஞாபகத்தில் வந்தது.

இறுதியில் டென்மார்க்கே வெற்றிபெற்றது.

தொலைக்காட்சி நிறைய நீண்டநேரத்திற்கு டனிஸ் தேசியக்கொடி காட்டப்பட்டது.

அடுத்தநாட் காலை அந்த முகாமில் இருப்பவனும் ஈரான் நாட்டைச்சேர்ந்தவனும் நேற்றைய உதைபந்தாட்டத்தை எங்களோடு சேர்ந்திருந்து பார்த்தவனுமான ஒருவன் சொன்னதை நான் இங்கு எழுதமுடியாது.

காரணம் எனக்கு வெட்கமாக இருக்கிறது.

வாசித்தால் நீங்களும் வெட்கப்படுவீர்கள் என்பதற்காக.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

## கூட்டுக்குடும்பமுறை பிரச்சனைக்குரியதா?

# விவாதம்

பேராசிரியர் க.ப.அறவாணன் அவர்கள் எழுதிய "தமிழர் தடங்கல்" என்னும் நூலில் கூட்டுக்குடும்ப முறை பற்றியும் தனிக்குடும்ப முறைபற்றியும் எழுதிய கருத்துக்களில் சில பகுதியை இங்கே தந்திருக்கின்றோம்.
இவற்றை ஒரு ஆரம்பமாக வைத்துக்கொண்டு இவ்விரு குடும்ப அமைப்புக்களில் எவை மனித வாழ்வுக்கு சிறந்ததும் ஒப்பானதும் என்பதுபற்றிய விதத்தில் விவாதம் இப்பகுதியில் இதழுக்கு இதழ் நடைபெறும்.

ஏதோ ஒரு வகையில் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமக்கு இருவகைப்பட்ட வாழ்வுமுறை பற்றிய அனுபவரீதியான கருத்துக்கள் உண்டு.
இவைபற்றி இப்பகுதியில் எல்லோரும் விவாதியுங்கள்.
காலதாமதமின்றி கட்டுரைகள் கிடைக்கவேண்டுமென்பதனை கவனத்தில் கொள்ளுங்கள்.

....ஆசிரியர்...

இன்று உலகில் குடும்ப அமைப்பை பொதுவாக இரண்டுபிரிவாக பிரிக்கலாம்.
தனிக்குடும்பம் கூட்டுக்குடும்பம் என்பவை அவை........

..........மூன்றுக்கு மேற்ப்பட்ட தலைமுறையினர் சேர்ந்து வாழும்கூட்டுமுறை ஈரோ – அமெரிக்கநாடுகளில் இன்று முற்றுமாக காணப்படாத ஒன்று......................ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் தனிக்குடும்பமுறையே இன்று பழக்கத்தில் உள்ளது. வயது வந்த முதியோர் தம் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்வதில்லை.

........................................................................................

........................அங்கங்கே அமைந்திருக்கும் முதியோர் இல்லங்களில் அமைதியாக தங்கள் வாழ்வை கழிக்கின்றனர்..............................................
...........பெரும்பான்மையான முதியோர் இல்லங்கள் ஐரோப்பாவில் சிறப்புற இயங்குகின்றன.பெற்ற பிள்ளைகளின் அரவணைப்பு பேரப்பிள்ளைகளின் அன்புமொழி ஆகியன முதியோர் இல்லங்களில் இடம்பெற்றவர்களுக்கு முற்றுமாக இல்லை என்று எண்ணிவிடவேண்டாம்.

..............................

...................................கூட்டுக்குடும்பம் ஆப்பிரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளில் இன்னும் சிதைந்துவிடவில்லை. எனினும் சிதைவுக்கான முன் அறிகுறிகள் இங்கே தோன்றத்தொடங்கி விட்டன. குறிப்பாக தமிழ் நாட்டில் பிள்ளைகளுடன் வாழும் பெரியவர் மகிழ்ச்சியாக இல்லை மாமியார் மருமகள் சண்டை, மாமனார் மருமகள் சண்டை இல்லாத குடும்பமே இல்லை என்று சொல்லிவிடலாம்.பணநோக்கு சமூகத்தினராக மக்கள் மாறிவிட்டபிறகுபணம் ஈட்டாத பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு சுமையாக தெரிகிறார்கள்.
வயதுவந்த பெற்றோர்களை வைத்துப் பாதுகாப்பதன் முதன்மை எவ்வளவுதான் உணர்த்தப்பட்டிருந்தாலும் செயல் வடிவத்தில் நாளுக்குநாள் அது சிதைந்து வருவதையே காண்கிறோம்...........
..........எனவே போலிக்கூட்டுக் குடும்பம் குறைந்து தனிக்குடும்பமுறை அதன் சார்பு விளைவான முதியோர் இல்லங்கள் வருவதையும் தடுக்கமுடியாது.



படிப்பகம்

www.padippakam.com

# வீடும் வெளியும்

இளைஞர் பக்கம்

விஜிதா விஜயேந்திரன்

இலங்கையில் ஒருகூட்டுக்குள் இருந்த எங்கள் வாழ்வு, வேறோர் நாட்டில் அகதிகளாய் வேறு சமூகத்துடன் வாழும்போது வீட்டிலும் வெளியிலும் என்வாழ்க்கை எப்படி இருக்கிறது எனப் பார்வையிடுவோம்.

சில வேளைகளில் எனது நேரம் தனிமையிலே கழிந்துவிடும். என் பெற்றோர்கள் பலவகையில் எனக்குச் சுதந்திரம் தந்துள்ளார்கள். அவர்கள் என்மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை நினைத்து நான் பெருமிதம் கொண்டதுண்டு.

வீட்டில் என் பெற்றோர்கள் அதைச் செய், இதைச் செய், அதுதான் நம் கலாச்சாரம் என்றால் நான் செய்யப்போகும் வேலையின் முழுஅர்த்தமும் தெரிந்தால்தான் முழுமனதுடன் அக்காரியத்தைச் செய்து முடிப்பேன்.

எனக்குச் சில வேளைகளில் தமிழர்களைப் பிடிக்காது. ஏனெனில் ஒருவன் நல்லவன் ஆகவும் விடமாட்டார்கள், அதேபோல் கெட்டவனாய் வாழவும் விடமாட்டார்கள்.

நாகரிகம் தெரிந்த மக்களுடனும், நாகரிகம் தெரியாத மக்களுடனும் வாழும் வாழ்க்கை மிகவும் கடினமான வாழ்க்கை. தமிழ்கலாச்சாரத்தின்படி பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். அவர்கள் நினைத்தபடி எதையும் செய்ய இயலாது. ஆனால் டெனிஷ் பெண்களைப் பார்க்கப் போகையில் அவர்கள் தமிழர்களை விட மிகவும் வேறுபட்டவர்கள்.

நம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் டெனிஷ் நன்றாகக் கதைக்க வேண்டும், நன்றாக படிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் டெனிஷ் விழாக்களுக்கோ அல்லது டெனிஷ் பிள்ளைகளுடனோ தங்கள் பிள்ளைகளைத் தனியே விடமாட்டார்கள். பெற்றோர்களுக்கு விருப்பம் இருந்தாலும் தன் பிள்ளையைப்பற்றி மற்றவர்கள் என்ன கூறுவார்கள் என்ற பயத்தால் மறுக்கிறார்கள். ஆகையால் பெண்கள் ஆகிய நமக்கு எப்பவும் கஷ்டந்தான்.

மற்றவர்களுக்காக வாழ்வது, ஏதாவதொன்று நாங்கள் செய்யப்போகும் போது மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என சிந்திப்பன ஆகியவை எனக்குப் பிடிக்காதவைகள்.

நான் வீட்டில் எப்படியோ அப்படித்தான் வெளியிலும். மனதில் இருப்பதை வெளியிலும் கூறிவிடுவேன். ஆகையால் என்மேல் அதிக அன்புவைத்திருப்பவர்களிடம் பேச்சு வாங்கியதுண்டு. அவர்கள் என் நன்மைக்குத் தான் பேசுகிறார்கள் என்று தெரியும். சிலவேளைகளில் அவர்கள் சொல்லுவதை என்னால் ஏற்க முடிவதில்லை. இதன் காரணம் அவர்கள் தமிழ் கலாச்சாரத்திலேயே ஒன்றியவர்கள். நாங்கள் வேறுபட்ட கலாச்சாரத்துக்கு மத்தியில் வாழ்பவர்கள். இதனால் இரண்டு கலாச்சாரத்தையும் வைத்து எங்களுக்கு எது சரியெனப் படுகின்றதோ அப்படியே வாழ்ந்து வருபவர்கள் தான் இச் சந்ததியினர். இதனால் நான் செய்வது சரியோ பிழையோ எதையும் நான் அறியேன். மனச்சாட்சிக்கு எது சரியெனப்படுகிறதோ அதைத்தான் நான் செய்து வருகின்றேன்.

இதில் எழுதியிருப்பது யாவும் எனது மனதுக்குள் இருந்தவை. இன்று பலருக்கு மத்தியில் வெளிவருகின்றது. எனக்குப் பிடித்த விடயம் கனக்க எழுதவில்லை. ஏனென்றால் எனக்கு பிடித்த விடயங்களைச் சொல்லுவதைவிட பிடிக்காத விடயங்களைச் சொல்லுவதில்தான் கூடியவிருப்பம் உண்டு.

### உலக நாடுகளின் உச்சி மகாநாடு

டென்மார்க் தலைநகரான கொப்பனேக்கனில் மார்ச்மாத முற்பகுதியில் நடைபெற்று முடிந்த இவ் உச்சிமகாநாட்டில் 120நாடுகளிலிருந்து 13,000பேர் பங்கேற்றனர். இலங்கை ஜனாதிபதி சந்திரிக்காவும் கலந்துகொண்டார். வறியநாடுகளுக்கு உதவுவதை முக்கிய நோக்கமாக கொண்டு நடைபெற்ற இம்மகாநாட்டில் 5மில்லியன் போட்டோப் பிரதிகள் (photo-copies) பாவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பங்கேற்றவர்கள் வயிற்று வலி, தலையிடி தவிர வேறு எந்த நோயாலும் பாதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகாநாட்டில் கலந்து கொண்ட உலகத்தலைவர்களின் பாதுகாப்பிற்காக டெனிஷ்பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது பல பொலிஸ்நிலையங்களில் குறைந்த எண்ணிக்கையான பொலிஸாரே வழமையான கடமைகளை கவனித்தனர். இருந்தபோதிலும் குற்றச்செயல்கள் வழமைக்கு அதிகமாக நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com


## மனதோடு பேசுதல்

செல்வன்

(தொடர்: 4)

உயிரே
வரும் வருடத்திற்கு
நிறைவாய் தர – தற்போது
வார்த்தைகள் மட்டுமே
என்னிடம் வசதியாக இருக்கிறது.

உண்மை!
ஊருக்கு பயந்து
சில காலமாக
அஞ்ஞாதவாசத்தில் இருக்கிறது
என்ற உண்மையை நீ அறிவாயா?



மாரி காலத்தில்
பெருகி வரும் புற்றீசல்களாய்
இங்கும் அங்கும் எங்கும்
பொய்களே புன்சிரிப்புகளுடன்......

எக்குத்தப்பாக
மூலை முடுக்குகளில்
அகப்பட்டு விட்டால் போதும்
சட்டையை பிடித்து இழுத்து வைத்து
உபதேசங்கள் செய்ய
ஆரம்பித்து விடுகின்றன.

காட்டுக்குள் அகப்பட்ட
குருட்டு பிச்சைக்காரனாய்
கைகளில் அவநம்பிக்கைகளுடன்
அலைவதே– என்
அன்றாட பிழைப்பாகி விட்டது.

என்ன தான் செய்வது?
எது செய்தாலும்
அது தவறாகி விடுகிறது.

தவறுகள்
என்னை
தத்தெடுத்து விட்டதோ என
தடுமாற்றமாக இருக்கிறது.

விரக்தியின் விளிம்பில்
ஊசலாடும் வாழ்விலும்
ஆசைகளும்
கரைக்கடல் அலைகளாய்
ஆரவாரப்படுத்தாமல் இல்லை.

வானில் வட்டமிட்டு – பின்
கரணமடிக்கும் பட்டம் என் மனம்.
நூலின் நுனியோ
உன் நினைவுகளின் பிடியில்.....

காற்றினில் கார்குழல் பறக்க
மாமர நிழலில் நின்று – நீ
அன்று கூறிய வாசகங்களில்
வாழ்வு தொடர்பான ஆவல்கள்–
இன்னும்
தொங்கு பறியில்
தொங்கிக்கொண்டிருக்கின்றன.

அன்று வந்த நாட்களில்
கவலைகள் பற்றி கவலைகள் இன்றி
வாழ்வின் கவிதைகளை
வரி விடாமல்
வாசித்துக்கொண்டிருந்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

கரங்கள் பற்றி
நாம் நடந்த போது
தொடர்ந்து வந்த
எம் நிழல்களின் கீழ்
தென்றல் வந்து ஆறிச்சென்றது.

"புன்னகை பூக்கும் பூக்கள்
குளிருடன் கூடிய இரவு
காதுக்கு இனிய நாதம்
இவற்றில் இதமானது எது?" – இது நீ

காதில் விழுந்தது பாதி
விழாதது பாதியாக
உன்னையே நான் பார்த்திருந்தேன்.
நாணத்துடன்
நீ மெல்ல தலை குனிந்தாய்.

வேதனையுடன்
நிகழும் இந்த நிகழ்காலம்
உன் அருமையை விளக்க நிகழும்
ஒரு நீண்ட போதனை
என்றே தோன்றுகிறது.

இங்கு
வரும் இரவுகளில்
தூக்கம் எங்கு வருகிறது?
துக்கங்கள் தாம் நிறைய வருகின்றன.

பல சமயங்களில்
கண் விழித்திருக்கும் போதே
கண்கள் நிறைய
கனவுகள் வர ஆரம்பித்து விடுகின்றன.

நாட்களை
எண்ணி எண்ணி
சலித்துப் போய் விட்டது.

இப்பொழுது
வருடங்களை எண்ண
ஆரம்பித்து இருக்கிறேன்.

விரல் விட்டு எண்ண
அதுவே இலகுவாக இருக்கிறது.

................................................

**தாய்மடி.....................................சுமதி.....................**

ஆகா! வெளிநாடு சொர்கமென்றெண்ணி
நெஞ்சில் பலபகல் கனவுகளுடன் கனவுகள்
நெஞ்சை சூழ்கிட பறந்து வந்தோம் –இப்
பனிவிழும் தேசத்தில்.
என்ன இது.....?
மனிதர்களா......மணிக்கம்பிகளுன்
போட்டியிடும் இயந்திர மனிதர்களுடன்
நானும் எத்தனை காலங்கள்......
உளம் சோர்ந்து,உடல் நொந்து
வீடுதிரும்பியும் இயந்திருமாகி
வாழ்ந்தது போதுமென்றாச்சு.
வாந்தியோ வருத்தமோ என்றால்
ஏங்குமனம் ஓய்வுக்காய்.....மறுகணம்
வீடுதிரும்பும் கணவன் குழந்தைகளுக்காய்
மீண்டும் இயந்திரமாகிடும் உடலும்
மனமும்.
அம்மாவே! உன்னை நினைக்கிறேன்......
"என்னபிள்ளை செய்யுது
உப்பிடி இரு கொஞ்சநேரம்...."
கூளோ கஞ்சியோ கொத்தமல்லித்தண்ணியோ
வாய்க்கிதமாய்.....உடலுக்கும் நலமாய்
தலுவாய் நீ.
அம்மா! இன்று என் துரிதத்தை கண்டால்
வியப்பாயா வேதனையடைவாயா அறியேன்
நான் நினைவுகள் எங்கோ சிறகெடுக்க
கையிலிருந்து விழுந்த குவளைதனை
குனிந்தெடுக்க முயலவும்
முள்ளைப்போல் முதுகில்வலியெடுக்க
"அம்மா" என்றலறினேன்;
என்னையும் அறியாது கண்ணீருடன்.
அந்நேரம் வந்த என் செல்வங்கள்
என் விழி பார்த்து அது துடைத்து
"அம்மா நீ **சிறு குழந்தையோ** என்பர்.
"உங்கள் அம்மா நானும்..
எனதம்மாவுக்கு இன்னும் சிறுகுழந்தை"
என்பேன் அவர்கள்
தலைகோதியே.

■



படிப்பகம்

www.padippakam.com

# அறியாமை இருள் !

கே . எஸ் . துரை.

" மனிதகுலம் இரண்டாயிரமாவது ஆண்டை உருப்படியாகச் சந்திக்க முடியுமா ? " என்ற ஏக்கத்துடன் இந்த நூற்றாண்டு தனது இறுதி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறது. ஒரு நூற்றாண்டில் இருபெரும் உலக யுத்தங்களைச் சந்தித்துவிட்ட களைப்பு. மானுடம் தானே தன்மீது இரண்டு அணுகுண்டுகளை வீசிப்பார்த்த குரூரம் , அணு ஆயுத யுத்தமொன்றை ஏற்படுத்தி; உயிர்ப்பூண்டை வேரோடு சாம்பலாக்க உலக நாடுகள் தமக்குள் வரிந்து கட்டிநிற்கும் கொடுமைகளென இந்த நூற்றாண்டு தான் பெற்ற மனிதர்களால் காயப்பட்டு நிற்கிறது. முதல் இரண்டு உலக யுத்தங்களையும் ஆரம்பித்து வைத்த பெருமைக்குரிய மேலைத்தேயத்தவர்கள் இரண்டாவது உலக யுத்தத்தை நடத்தாமல் தவிர்த்து , அதன்மூலம் அழிந்துபோன செல்வங்களை மனிதகுல மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தியிருந்தால்: இன்று உலகில் ஒருவர் கூட அகதியாக இருந்திருக்க வேண்டிய தேவையில்லை. உலகம் முழுவதுமுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து அறைகள் கொண்ட வீடும் , ஒவ்வொரு சிறு நகரத்திற்கும் ஒவ்வொரு பிரதான வைத்தியசாலையையும் அமைத்திருக்க முடியுமென ஆய்வுகள் கூறுகின்றன. இதுவே இரண்டாம் உலக யுத்தத்தை முடித்துக்கொண்ட பின் உலகம் கண்டுபிடித்த அரிய உண்மையாகும். இந்த உண்மைக்குள் மறைந்து கிடக்கும் அவலத்தின் மறுபெயரே அறியாமையாகும். மண்ணிலிருந்து மனிதன்வரை சகல அவலங்களுமே இந்த அறியாமை என்னும் இருட் சுனையிலிருந்தே ஊற்றெடுத்து வருகின்றன.

தற்போது மனிதனுக்குத் தெரிந்துள்ள அதிகூடிய வேகம் ஒளியினுடையதாகும். இந்த வேகத்துடன் பயணம் செய்தால் சூரியனை அடைவதற்கு சுமார் எட்டு நிமிடங்கள்வரை எடுக்கும். இதுவரை அண்ட வெளியில் நாம் கண்டறிந்துள்ள கடைசி நட்சத்திரத் தொகுதியை நோக்கி ஒளியின் வேகத்துடன் பயணம் செய்தால் அதைச் சென்றடைய பத்துக்கோடி ஒளிவருடங்கள் செல்லும். ஆனால் ஒரு முழு ஆயுள் கொண்டுள்ள மனிதனின் இதயம் துடிக்கக் கூடிய மொத்த எண்ணிக்கையோ ஆகக் கூடியளவு முப்பத்தைந்தரைக் கோடி தடவைகள் மட்டுமே. இவ்விரு விடயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்த பின் அறிஞர்கள், " எல்லையற்ற பிரபஞ்ச வெளியில் மனிதன் இருந்தாலும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான் ! " என்று குறிப்பிட்டனர். இப்படிப்பட்ட முடிவற்ற இருட் பெருவெளியிலே சில சிம்னி விளக்குகளை ஏற்றிக் கொண்டது போலவே மனிதகுலம் இதுவரை அறிந்து கொண்ட சங்கதிகள் உள்ளன. எனவேதான் அறியாமை என்பதே மனிதகுலத்தின் முன்வைக்கப்பட்டுள்ள மகத்தான சவால் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

புவிமீது படைக்கப்பட்டுள்ள எந்தவொரு உயிரினத்தின் அமைப்பும், அவற்றின் அகபுற வடிவங்களும்: பத்து இலட்சம் வருடங்களுக்கு மட்டுமே நிலைத்திருக்க வல்லவை. அதன்பின் அந்த வடிவம் முற்றாக மாற்றமடைந்து விடும். இதுவரை உலகில் தோன்றி மறைந்துள்ள உயிரினங்களின் வரலாற்றில் இந்த உண்மையே புதைந்து கிடக்கிறது. ஆனால் மனிதன் என்ற உயிரினம் மட்டும் இந்த அடிப்படை விதியை உடைத்துக் கொண்டு, இன்று வரை முப்பது இலட்சம் வருடங்களாக



படிப்பகம்

www.padippakam.com

அழியாமல் இருந்து வருகிறது. காலத்தின் மாற்றத்தால் அழிந்து போகாத மனித வடிவம் புவிமீது நிலைத்து நிற்க ஆதார விசையாக அமைந்தது அவனது அறிவாகும். ஆரம்ப மனிதனின் மூளையின் மொத்தக் கொள்ளளவு 400 $cm^3$ ஆகும். ஆனால் இன்றைய மனிதனின் மூளையின் மொத்தக் கொள்ளவு 1400 $cm^3$ ஆகும். அமைப்பால் வேறுபடாது மூளையில் ஏற்பட்ட இத்தகைய அபார வளர்ச்சியே மனிதன் என்னும் வடிவம் புவியில் இதுவரை மாற்றமடையாது இருக்க உதவியுள்ள தலைமைக் காரணியாகும்.

உலகம் பயன்படுத்திவரும் எந்தவொரு விஞ்ஞான உபகரணமும் வானத்திலிருந்து யாரும் போட்டதல்ல. அனைத்தையும் கண்டுபிடித்தவன் மனிதனே. இந்தச் சாதனங்கள் அனைத்துமே இயற்கைக்குள்தான் ஒழிந்து கிடந்தன. அவற்றைத்தேடி இயற்கையிலிருந்து பிரித்தெடுத்து வைத்திருப்பதே அறிவுதான். எந்த மக்கள் குழுவிடம் இந்த இரகசியங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் அதிகமாக இருக்கிறதோ அவர்கள் வசமே உலகின் முதன்மையும் போய்விடுகிறது. அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் இன்றுவரை தாம் கண்டுபிடித்த அதி முக்கிய பிரபஞ்ச இரகசியங்களை வெளியிடாது பாதுகாத்து வருகிறார்கள். தமது எதிர்கால வெளிநாட்டுக் கொள்கைகளை தீர்மானிக்கும்போது இவ் அறிக்கைகளுக்கே பெரும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதனடிப்படையில் உளவுபார்க்கும் சட்லைட்டுக்கள் தமது செவ் அலைக்கதிர்கள் மூலம் உலகத்தின் சகல நாடுகளிலும் பேசப்படுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த இரகசியங்களை அப்பொழுதே பதிவு செய்து கொள்கின்றன. மேலும் இவர்களின், " N.S.A" என்ற ஒருபிரிவு உலகத்தில் பேசப்படும் எல்லாவிதமான வான் அலைவரிசைகளையும் சேகரிக்கவும், அதேவேளை அவற்றில் ஒழிந்திருக்கும் சங்கேதக் குறியீடுகளைச் செம்மையாக மொழி பெயர்ப்பதற்குமான வல்லமையைப் பெற்றிருக்கிறது. ஒருநிமிடத்திற்கு 200 மீட்டர் வேகத்துடன், ஆகாயத்தில் பறக்கும் விமானம் போலவே இப்போது கடலின் அடிப்பகுதி ஊடாக ஆழ்கடல் விமானங்கள் சுழியோடிச் செல்கின்றன. இத்தகைய அறிவியல் வளர்ச்சி வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கு மிடையில் நிமிடத்திற்கு நிமிடம் பேரிடைவெளியை உண்டுபண்ணி வருவதை நிராகரித்துவிட்டு, நாம் வாழ்வை இருண்மைக்குள் சிறை வைத்திருத்தல் தவறாகும்.

" ஓர் மகத்தான விடயம் உச்சத்திலிருக்கும் போதே இன்னொரு மகத்தான விடயம் தோற்றம் பெற்றுவிடுகிறது ! " என்ற வாசகத்திற்கேற்ப அடுத்த நூற்றாண்டின் அறிவியல் உலகம் இந்த நூற்றாண்டின் பல முக்கிய விடயங்களைக் கிடப்பில் போட்டுவிட்டு, தனது மகத்தான பிரச்சனையை வேறோர் இடத்திற்கு நகர்த்திவிடும் அறிகுறிகள் விஞ்ஞானத்தின் சகல படிமானங்களிலும் தெரிகிறது. இந்தநிலையில் கீழைத்தேயச் சமூகமானது விஞ்ஞான ரீதியாக வளர்ந்துவிட்ட உலகம் முன்னெடுக்கும் பாய்ச்சலுக்கு இணையாக தன்னையும் தயார்படுத்திக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். நம்மைச் சுற்றி மூடியிருக்கும் அறியாமை இருள் எத்தகையது? அதன் ஊற்றுக்கண் எங்கிருக்கிறது? என்பதை அறிவியல் ரீதியான தேடலுக்கு உட்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் நமது அறிவுக் கதவுகள் மீது போடப்பட்டுள்ள துருப்பிடித்த பூட்டுக்களை ஒவ்வொன்றாக அடையாளம் கண்டு திறந்துகொள்ள முடியும். " தட்டுங்கள் திறக்கப்படும் ! " என்ற வாசகத்தின் உட்பொருளும் இதுவே.

நம்மைச் சுற்றியுள்ள வாழ்வியல் சமூகப்பிரச்சனைகளுக்கு அடிப்படைக் காரணி



படிப்பகம்

www.padippakam.com

அறியாமையும், அறியமறுத்தலுமேமாகும்.

" கஞ்சி குடிப்பதற் கில்லார் — அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமில்லார் "

என்ற பாரதி பாடலில் இதற்கான இலகுவான தேடலொன்று தென்படுகிறது. மக்கள் கஞ்சிக்கு வழியில்லாமல் இருக்கிறார்களேயென்பது கவலைதரும் விடயமல்ல. அவர்கள் தமக்குக் கஞ்சிகூடக் கிடைக்காமலிருப்பதற்குரிய உண்மைக் காரணங்களை அறியமுடியாமல் இருக்கிறார்களே ? என்பதுதான் பெரும் கவலைதரும் விடயமாகும் என்கிறது இப்பாடல். மேலும் தமது ஏழ்மைக்கும், வறுமைக்கும் கடவுளும், ஊழ்வினையுமே காரணமென்று எண்ணும் மக்களே இன்றும் உலகில் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இவர்கள் உணவுப்பிரச்சனையிலிருந்து, தம்மைச் சூழவுள்ள சகல பிரச்சனைகளுக்கும் ஊழ்வினையே மூலகாரணியெனப் பிழைபட எண்ணி மருள்கிறார்கள். பிரச்சனைகளும், அவற்றின் தீர்வுகளும் அவை தோன்றிய புள்ளியிலேயே மறைந்து கிடக்க மனிதர்கள் தமது துன்பங்களுக்கான தீர்வுகளை அவற்றோடு சம்மந்தப்படாத இடங்களில் தேடி அலைகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட வந்த வள்ளுவர், " கேடில் விழுச் செல்வம் கல்வி. " என்று வலியுறுத்தினார். "அறிவே மக்களின் அணிகலன். " என்றது அர்த்த சாஸ்த்திரம். "கற்றல் கேட்டல் உடை யோரே பெரியோர் " என்றார் சம்மந்தர். " கற்றறியாதவன் ஏன் பிறந்தானென ?" சமூகத்தின் மீது சாட்டை கொண்டு வீசினார் பிளேட்டோ.

எனினும் இத்தகைய காரணங்களைக் காட்டிக் கற்பது மட்டுமே அறிவுடமை என்றும் மகிழ்ந்துவிட முடியாது." அறிவு அற்றம் ( அழிவு ) காக்கும் கருவி ." யாக இருக்க வேண்டும். அது இல்லாத கல்வியால் மனித உயிருக்குப் பாதுகாப்புக் கிடையாது. ஈழத்தமிழினம் தனது கடந்தகாலக் கல்விமுறைமையில் மலிந்து கிடந்த பல்வேறு இடர்ப்பாடுகளை முழுமையாக அடையாளம் கண்டு கொள்ளத் தவறிவிட்டதை இங்கு சுட்டிக் காட்டலாம். சீதனச் சந்தையை இலக்காக வைத்து, டாக்டர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்குவதே கல்வியென்ற என்ற எண்ணத்தாலேயே மத்தியதர வர்க்கம் கவரப்பட்டிருந்தது. இவர்கள் கல்வியின் மற்றெல்லாப் பக்கங்களையும் தாழ்வுபட்ட செயலாகவே எண்ணி மாய்ந்தனர். இந்த முறைமையினூடாக உருவாக்கப்பட்ட டாக்டர்களிலும், பொறியியலாளர்களிலும் 90 விழுக்காட்டினர் தற்போது தாய்நாட்டில் இல்லை. 1983 யூலைக் கலவரங்களை சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்து விட்டு, " போர் என்றால் போர் ! " என்று உறுதியாக அறிவித்த போது இராணுவப் பயிற்சியை கல்வியோடு சேர்த்துப் பெற்றிராத நமது கல்விமுறை தாய் நாட்டை விட்டுப் புலம் பெயர்வதைவிட வேறு வழியற்ற கையறு நிலையில் தடுமாறி நின்றது. ஒரு நாட்டின் 18 வயதுக்கு மேற்பட்ட குடிமக்கள் யாவருக்கும் இராணுவப் பயிற்சி கட்டாயமானது. இந்த அவசியத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் சரியாக எடுத்துச் சொல்லத் தவறிய நமது பழைய அரசியல் வாதிகள் அனைவருமே பாண்டித்தியம் பெற்ற சட்டத்தரணிகளே!

பாடசாலை செல்லவேண்டிய வயதில் சுதந்திரப் போரை முன்னெடுத்துள்ள இன்றைய இளைய தலைமுறையினருடன் கைகோர்த்துப் பணியாற்ற வேண்டிய கல்விமான்களில் பெரும்பான்மையோர் வெளி நாடுகளிலும் மதில்மேற் பூனைகளாக இருப்பதன் காரணமென்ன ? ஆரம்பத்திலிருந்தே நமது கல்விமுறையும், கல்விபற்றிய தேடலும் இன்றைய நெருக்கடிகளை முன்னெதிர்வு கொண்டவையாக நடத்திவரப் படாமையே இவர்கள் தூரவிலகி நிற்பதன் பிரதான காரணியாகும். ஆகவேதான் பொறியியலாளரும், டாக்டருமே போதுமென்று எண்ணிய சமூகத்தின் கரங்களில் சிங்களப் பேரினவாதம்



படிப்பகம்

www.padippakam.com

இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கி தமிழினத்தின் மீதான தனது அறிவியல் , கலாச்சார மோசடியை சாதுர்யமாக நிகழ்த்தியது. அதேவேளை பாதுகாக்கப் படவேண்டிய யாழ் - நூல்நிலையத்தையும் கச்சிதமாகத் தீமூட்டியது. இதிலிருந்து வெளிப்படும் உண்மை கற்பதால் மட்டும் அறிவுவருவதில்லை. சமூகத்தின் சகல வாழ்வியல் படிமானங்களையும் விரவிவராத கல்வியும் ஓர் அறியாமையின் சின்னமே ! என்பதாகும். இக் கருத்தையே திருக்குறள் , " கற்க கசடற . " என்று நாசூக்காகக் கோடிட்டுக் காட்டியது.

எப்போதும் கற்றலும் , கற்றல் மூலம் கண்டுபிடித்த உண்மைகளை மக்கள் மயப்படுத்துவதுமே சமூகத்தை அறிவார்ந்த நிலைக்கு நகர்த்திச் செல்லும் வழிமுறையாகும். ஒரு காலத்தில் தமிழரிடையே பிரபலம் பெற்றிருந்த சித்த வைத்தியக்கலை இன்று பெரும்பாலும் அழிந்தேபோய்விட்டது. வல்லாரைக் கீரையை " சரசுவதி " என்றும், தாளிசபத்தையை " சைவம் " என்றும் மறை பொருளால் குறிக்க வேண்டியது அன்றைய சித்தர்களின் தேவையாக இருந்திருக்கலாம். இதுபோல ஏராளமான சித்த வைத்தியப் பாடல்களில் யாருக்குமே புரியாத இரகசியக் கருத்துக்களையே மறைத்து வைத்திருந்தமையால் அவ்வைத்தியக் கலையை நாம் இழந்துவிட்டோம். சித்தர்களின் பல நல்ல கருத்துக்களை சமுதாயம் நிராகரித்து விட்டாலும் : தாமறிந்த நல்ல விஷயங்களை மற்றவருக்குத் தெரியவிடாமல் மறைத்து வைப்பதில் மட்டும், சமூகம் சித்த வைத்தியக் கொள்கையைச் சிறப்பாகக் கடைப்பிடித்து வருவது தெரிகிறது. ஏனெனில் மாணவரைச் சரியான வழியில் நெறிப்படுத்தும் துண்டுப் பிரசுரங்களோ , கல்வி வழிகாட்டும் உத்தியோகத்தர்களோ நமது கல்வி முறைமையில் சிறப்பாக அறிமுகமாகவில்லை. கடந்த காலங்களில் மேலைத்தேயப் புலமைப் பரிசில்களையும் , உயர்கல்வி வாய்ப்புகளையும் மேட்டுக்குடி மக்களே தமது பரம்பரைச் சொத்தாக்கினர். கீழ்த்தட்டு மக்களுக்கு இவைகள் எட்டாக் கனிகளாகவே இருந்துவந்தன. இவைகள் மூலம் அறியாமை , அறியமறுத்தல் மட்டுமல்ல அறிய முடியாமல் தடுக்கப்பட்ட அவலத்திற்குள்ளும் நமது இனம் சிக்குப்பட்டிருந்ததை நாம் வெளிப்படையாகவே அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

மேற்கண்ட மூன்று அடிப்படை விடயங்களிலிருந்தே நம்மைச் சூழ்ந்துள்ள சகல பின்னடைவுகளும் ஊற்றெடுத்து வருகின்றன. இந்த இருட்டுயரை வெற்றிகொள்ளும் ஒளியை உருவாக்கும் வல்லமை அறிவுக்கே இருக்கிறது. அள்ளும்போது பெருகி , அள்ளாத போது குறைந்துவிடும் கோட்பாட்டில் இயங்குவது அறிவு ஒன்று மட்டுமே . வேறெந்தப் பொருளுக்குமே இத்தகைய வல்லமை கிடையாது. வளர்ந்து செல்லும் அறிவைக் கொண்டவரே தம்மிடமுள்ள குறைகளைக் கண்டுபிடித்து விடுதலை பெறமுடியும். நாம் பெரிதாக எண்ணுவது போல மனித உடல் பெறுமதிவாய்ந்ததல்ல. ஒரு முழு மனித உடலில் உள்ள சரியான பெறுமதி , ஒரு சதுர மீட்டருக்கு வெள்ளையடிக்கப் போதுமான சுண்ணாம்பு, ஒருசில கிராம்கள் இரும்பு. சிறிதளவு தீப்பெட்டிக் குச்சுகளில் தடவக்கூடிய மருந்து, சொற்பமான கரி, பெறுமதியற்ற பல லீட்டர் நீர் ஆகியவையே. இவற்றின் மொத்தப் பணப் பெறுமதி ஐந்து டெனிஸ் குறோணர்களுக்கும் குறைவானதே. உலகின் மாபெரும் மனிதனின் உடலாகட்டும், சாதாரண முகவரியற்ற பிச்சைக்காரனது உடலாகட்டும் இப் பெறுமதியில் பேதம் கிடையாது. பேதம் விலை மதிப்பற்ற அறிவால் மட்டுமே தோன்றும். தாயின் கருவில் மனிதன் உருவாகும் போது, முதன் முதலாக இரப்பர் போன்ற சிறு பொருளாகவே மனித ஜனனம் நடை பெறுகிறது. இச்சிறு துணிக்கையே மனிதனின் அடி மூளையாகும். இதற்குள் மறைந்திருப்பதே ஜீவ அணுவாகிய உயிர். இங்கிருந்து புறப்படும் விசையினால்தான் குழந்தையின் மற்ற அவயவங்கள்



படிப்பகம்

www.padippakam.com

யாவும் ஒவ்வொன்றாகத் தோற்றம் பெறுகின்றன. இவ்விதம் அறிவிலிருந்து தோன்றியும் கூட மனிதன் அறிவுத் தரித்திரனாயும், சிந்தனைச் சேம்பேறியாகவும் இருப்பதே நமது வளர்ச்சிக் குறைவின் அடிப்படைக் காரணியாகும்.

சர்வதேச சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சியோடு நாமும் இணைந்து வெற்றி பெறமுடியும். மெய், வாய் , கண் , மூக்கு , செவி போன்ற ஐம்புலன்களுக்குள் வைத்து வாழ்க்கையைத் தீர்மானிக்கும் இருட்சிறையிலிருந்து நாம் வாழ்வை மீட்டெடுத்தாக வேண்டும். விலை கொடுத்து வாங்க முடியாத மேன்மை ஒவ்வொரு மனிதனிலும் மறைந்து கிடக்கிறது. அம் மேன்மை ஒருவனில் வெளிப்படும் போதே உலகம் அவனை மனிதனாகக் காணும். எம்மால் என்ன செய்ய முடியும் என்பதை மனதில் திட்டங்களாக வைத்துக் கொண்டு, நாமே நம்மை உயர்வாக மதிக்கிறோம். ஆனால் உலகம் நாம் என்ன செய்தோம் என்பதை வைத்தே நம்மை மதிப்பீடு செய்கிறது. இப்படியொரு கோணத்தில் நின்றே புலம்பெயர் வாழ்வு அவலமானது, ஏதிலிநிலை கொண்டதெனப் பலரும் முடிவுகட்டுகிறார்கள். ஆனால் புலம்பெயர் வாழ்வு உலகத்தின் அதி உன்னதமான அறிவியல் வளர்ச்சிக்குப் பக்கத்திலிருப்பதை ஏனோ பலரும் கண்டு கொள்வதில்லை. புலம்பெயர் தமிழர்கள் மேலை நாடுகளில் தமக்குக் கிடைத்துள்ள மகத்தான அறிவியல் வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் அவர்கள் ஓர் பெறுமதி மிக்க மக்கள் குழு என்பதை உலக அரங்கில் உறுதியாக நிலைநாட்ட முடியும்."

**(இவைபற்றி விரிவாக இன்னொரு தடவை எழுதுவேன்)**

**கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.** " என்ற பழமொழிக்குள்ளேயே நாம் பெறக்கூடிய உயர்வும் மறைந்து கிடக்கிறது. அதேவேளை நமது அறிவு இன்னொரு கையறு நிலைக்குள் நம்மை அழைத்துச் செல்லாத வகையில் நுட்பமாக பின்னப்பட வேண்டியதும் அவசியமாகும்.

ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி நிலைக்குப் பின்பு மனிதனின் மூளையின் நிறை வருடாந்தம் மூன்று கிராம் அளவு குறைவடைந்து செல்லும். இது அறுபது வயதின் பின்னர் மிக வேகமாகி வருடாந்தம் நாலு கிராம் என்ற வேகத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும். எனவேதான் எதையும் பின்போடலாம் அறிவைப் பெருக்கும் பணியை மட்டும் கணப்பொழுதும் பின்போடக்கூடாது. " ஓம் தத்வமசி " என்கிறது வேதம். இதன் கருத்து, " **எல்லாம் என்பது நீயே !** " உனது உயர்வுக்கான விசையும் , அதற்கான செயற்பாடுகளும் உனக்கு வெளியில் இல்லை. இதை ஒருவர் அறிவால் காணும்போதே அவரைச் சூழ்ந்துள்ள முதல் இருள் விலகுகிறது. ஒரு சில மேதைகளும் பலகோடி மந்தைகளும் கொண்ட உலகம் பெருமைசார் விடயமல்ல. எல்லோரும் அறிஞரே என்பதில்தான் உலகம் பெருமைப்படுகிறது. இதை விளக்கவந்தபோதே சோக்கிரட்டீஸ் ," **உன்னையே நீ அறிவாய் !** " என்று கூறினார். அதையே திருமூலர் , " **தன்னையறிந்தால் தனக்கொரு கேடில்லை !** " என்று பாடிவைத்தார். இவைகளை ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளேயே அறிந்து உயர்வுபெற வேண்டும். ■



படிப்பகம்

www.padippakam.com

# பிரக்ஞை

நான், அம்மா, அக்கா, தங்கைச்சி, ஐயா எல்லாருமாக நடுவீட்டுக்குள்ள இருக்கிறம். மூலையில் கைவிளக்கு எரிந்துகொண்டிருக்கிறது. விளக்கு சின்னதுதான் ஆனால் அறையிலிருந்த இருட்டு முழுவதையும் விரட்டியடித்துவிட்டிருந்தது. ஒருகடகம், இல்லை! ஒருமூடல் அதுவும் இல்லை! அப்படியென்றால் அதனையெப்படி அழைப்பது? ஓ! ஒரு குஞ்சுப்பெட்டி இதுதான் சரி. அது நிறைய இடியப்பம் இருக்கிறது. உடனே அம்மியில் அரைச்சு எடுத்துவந்த சம்பல் ஒரு கிண்ணத்திலும் சட்டிநிறைய தக்காளி போட்டு வைச்ச சொதியும் இருக்கிறது. எல்லாருமாக சாப்பிடத் தொடங்கும்போது நான் மட்டும் குளப்படி செய்கின்றேன்.

'எனக்கு இடியப்பம் வேண்டாம், எனக்கு ஐயா வாங்கிவந்த பணிஸ்தான் வேணும்' இதில் நான் பிடிவாதமாக நிற்கிறேன். அம்மா அகப்பையைத் தூக்குகிறாள். திண்ணையில் இருந்து நிலைமைகளை அவதானித்த அம்மம்மா(அம்மாவின்தாயார்) 'நான் வியாபாரத்துக்கு எடுத்துச்செல்ல அரிந்து வைத்த வாழைப்பழச் சீப்புகளில் நாலு கரைந்த பழத்தை இப்ப சாப்பாட்டுக்கு எடுங்கோவன்' என்று கூறுகிறாள்.

ஐயா சொல்லுகிறார் 'அதிலை பிள்ளை இரண்டு பழத்தைப் பிடுங்கி பணிசோட அவனுக்கு குடுங்கோவன்' ஐயா அம்மாவை எப்பொழுதும் பிள்ளைஎன்றுதான் அழைப்பார். எனக்கு பணிசும்பழமும், அவைக்கு சம்பலும் சொதியும் இடியப்பமும். எனக்கு நிறையச் சந்தோசம். நான் வீட்டில் எல்லோருக்கும் செல்லம். யாரென்றில்லை ஒருவர் கோபித்தாலும், வேறுயாராவது ஒருவரிடமிருந்து அரவணைப்பு கிடைக்கும்.

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். 'மாமி கொஞ்சம் காலைவிலத்தணை' தாவாரத்துக்கு குனிந்தவாறு சொல்லிக்கொண்டு பெரியப்பா திண்ணைக்கு வருகிறார்..... பெரியப்பாவென்றால் அம்மாவின்ர சொந்த மச்சான்.

'யார் வாத்தியாரே! வாங்கோ, வாங்கோ' ஐயா சாப்பாட்டுக்குள்ளாலை கையை எடுத்துக்கொண்டு செம்பையும் தண்ணியையும் தூக்குகிறார்."அவசரமில்லை நாங்கள் முற்றத்தில் இருக்கிறம், நீங்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வாங்கோ" என்றுகூறிக்கொண்டு பெரியப்பா முற்றத்துக்கு திரும்புகிறார்.

முற்றத்தில் இந்தியாவிலிருந்து வந்த நடிகர் கோபாலகிருஷ்ணர்; அவர் கையில் ஒரு பன்னிரண்டுவயது மதிக்கத்தக்க சிறுமியுடன் நிற்கிறார். படங்களில் பார்த்த அதேமுகம்; நல்ல நரைத்த வெள்ளைத்தலை; வெள்ளை அரைக்கைச்சேட்+ வெள்ளை நாலுமுழம் அந்தச் சிறுமி கூட வடிவானவளாக இருக்கிறாள். அவளுக்கு இது புது இடந்தானே. அவளது வண்டுக்கண்களால் உருட்டிஉருட்டி எல்லோரையும் பார்க்கிறாள். ஆனால் எனக்கோ அவள் என்னை மட்டும் துரத்தித்துரத்தி தேடுவதுபோல் மனசுக்குள் ஓர் நினைப்பு.

ஐயா முற்றத்துக்கு வந்ததும் ஐயாவும் பெரியப்பாவும் கதைத்துக் கொள்ளுகினம். சித்தப்பாவும் தங்களின்ரை வீட்டுத் தாவாரத்திற்குள்ளாலை குனிந்து முற்றத் துக்கு வருகின்றார்.

எங்களின்ரை வளவிற்கு பெரிய முற்றம். அடுப்புக்கு மூன்றுகால் வைச்சது மாதிரி எங்கடைவீடும் சித்தியின்ரைவீடும் மாமாவின்ரைவீடும். இந்த மூன்று வீடுகளையும். பிறவெட்டுத்தடிகளால வளைச்சுப் போட்ட வேலி இருக்கு, ஆனால் படலை இல்லை. முற்றம் நிறைய வெள்ளை மணல், அன்று பௌர்ணமி; அதனால் முற்றம் முழுவதும் பால்போல் இருந்தது. வேலிக்களுக்கேயிருந்த நந்தியாவெட்டையும் பட்டிப்பூவும் காற்றடிக்கும் போதெல்லாம் சிரித்துக் கொள்ளுகின்றன. மாலுக்குள்ள லட்சுமி படுத்துக்கொண்டு பகல் மேய்ந்த புல்லின் சுவையினை பரிசீலித்துக் கொண்டிருந்தது.

இப்ப எங்கள் முத்தம் நிறைய சனம். அந்தோனி மாமா, காதர் காக்கா இன்னும் நிறைய அப்பாவின்ரை கட்சியாக்கள். பெரியப்பா கொண்டு வந்த அரிக்கன் இலாம்பு

**கரவைதாசன்**



படிப்பகம்

www.padippakam.com

இரண்டையும் அம்மாவிடம் நீட்டியவாறு 'சிமினியை மினுக்குங்கோ' என்றுசொல்லுகிறார். ஆனால் இராணிச்சித்திதான் இலாம்புகளை வாங்கிக் கொண்டு எரிச்ச உமி போட்டு சிமினிகளை மினுக்குகிறாள்.

அரிக்கன்இலாம்பு இரண்டும் இப்போ முற்றத் துக்கு வந்தாச்சு. எல்லோரது முகங்களும் இப்போ வடிவாகத்தெரிகிறது. வகுப்பு ஆரம்ப மாகியாச்சு. முதலில் பெரியப்பா; பிறகு ஐயா; இப்போ கோபாலகிருஷ்ணர் பேசிக்கொண்டி ருக்கிறார். நாட்டில் எல்லோரும் கட்சிக்காக கூட்டம் கூடுவார்கள். ஆனால் இவர்கள் வகுப்பு எடுக்கிறம் அல்லது நடத்துகிறம் என்றுதான் சொல்லுவார்கள். அவர் பேசுவது என் காதில் தெளிவாக விழுகிறது. ஆனால் அதுபற்றி நான் யாருடனும் கதைத்துக் கொள்வதில்லை. அதற்கான பக்குவம் இன்னும் எனக்கு வரவில்லையாம். ஐயாவும், மாமாவும் கண்டிப்பான தொனியில் சொல்லிக் கொள்வார்கள். "நீயென்ன ஏழாம் வகுப்பில் தானே படிக்கிறாய், அதற்கான முதிர்வும் பக்குவமும் வரஇன்னும் குறைந்தது மூன்று வருடங்களாவது வரட்டும்" என்று சொல்லுவார்கள்.

கோபாலகிருஷ்ணர் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். "பேரினவாத அரசு அப்பாவி மக்களுக்கெதிராக அராஜகத்தை" எல்லோரும் அவதானமாக கேட்டுக்கொண்டி ருக்கிறார்கள். மற்றக் கூட்டங்களில் கை தட்டி ஆரவாரம் செய்வதுபோல் இல்லாமல் எல்லாரும் அமைதியாகவிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும்தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் சொற்களை மனப்பாடம் செய்து கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறேன். வலு தெளிவாக என் காதில் விழுகின்றன. நவகுடியேற்றவாதம், அராஜகம்,பேரினவாதம்,கொடூரம்,கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. பங்கெடுப்பு சொற்கள் தொடர்கிறது. நான் அவற்றை அசை போட்டுக்கொண்டு உச்சரித்துப் பார்க்கிறேன்.

எனக்கு பக்குவமும் வர இன்னும் மூன்று ஆண்டுகள்தான் இருக்கின்றன. நானும் ஐயாவைப்போல, மாமாவைப்போல, பெரியப்பா வைப்போல, கோபாலகிருஷ்ணர் போல பேச வேண்டும்.

. . . . . .

# வாழ்வு

கையில் குப்பியும்
குப்பியில் எண்ணையும்
எண்ணைதடவ கனத்த துவக்கும்.
துவக்கைப்பிரித்து ஊறவைத்து
ஊறல் முடிந்து துடைத்தபின் பொருத்தி
பொருத்திய துவக்கை தோளிற் சுமந்து
சுமைகளோடு எல்லை காத்து
காத்திருந்தும் எதிரியைக்காணா
கண்ட நண்பனை சுட்டுப்பொசுக்கி
பொசுங்கிய உடலைச் சாம்பலாய் அள்ளி
அள்ளிய சாம்பலைச் சுவரில் பூசி
பூசி மெழுகி எதிரியென் றுரைத்து
உரைத்த தலைமையின் பின்னால் நடந்து
நடந்த பாதம் சலிப்புக்காண
காணாமல் ஓடி மறைந்து வாழ்ந்து
வாழ்வும் வெறுத்து வழியும் இழந்து
இழந்தோம் என்று தோணி ஏறி
ஏறிப் பாயும் அலைகளைக் கடந்து
கடந்த பாதையை எண்ணி நொந்து
நொந்த மனத்தொடு இந்தியா வந்து
இந்தியா வந்ததும் தலைமைகள் துரத்த
துரத்தி வாழ்வை ஓடிக் களைத்து
களைத்தாய் வாவென பனிமுகில் அழைக்க
அழைத்தாய் வந்தேன் எனவந்து வீழ்ந்து
வீழ்ந்து அன்னிய வாழ்வுள் சிக்கி
சிக்கல்கள் பலவாய் சூழ்ந்து கொள்ள
சூழ்ந்து கொண்ட சிக்கல்கள் கழுவ
கழுவும் சாலையை நோக்கி நடக்க
நடையில் வெண்பனி நொறுங்கிக் கரைய
கரையும் காலத்தை எண்ணிச் சினக்க
சினந்த வெள்ளையன் வேலையால் நிறுத்த
நின்றது வாழ்வு அசையாதோ ரிடத்தே.

**தமயந்தி**.......................................



படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்வு

**வை.சி. சிவநாதன்**

ஏறக்குறைய பத்தாண்டுகள் தீய்ந்துவிட்டன. இதற்குள் டெனிஷ்றெட்குறோஸ் சென்ரர், டெனிஷ்அகதிகள் பராமரிப்புச்சங்கம்,டெனிஷ் மொழிபடிக்கும் பாடசாலை, கொம்மூன் கொய்ஸ்கூல், மியூசியத்தில் வேலை, இறுதியாக கோழி பாகுபடுத்திபதனிடும் தொழிற்சாலை (ஒரு மணித்தியாலத்துக்கு 6500 கோழிகள் வெட்டப்படும் தொழிற்சாலை) வேலை அதுவும் மூன்று கிழமையில் வேலையால் நிற்பாட்டப்படுவதற்கான வேலை நீக்கப்பத்திரமும் வழங்கப்பட்டு விட்டது. அதாவது ஜனவரி இரண்டாம் தேதியுடன், ஆனால் கரனுக்கு ஏற்பட்டுள்ள கைமூட்டு வலி, தசைநார்பிடிப்பு என்பவைகளுக்கான முற்றுப்புள்ளிதான் இன்னும் தெரியவில்லை.

டிசம்பர் 30ம்திகதி காலை9.00.... வாசல் கதவுகளில் உள்ள கடிதம்போடும் இடைவெளியால் கடிதம் வீழ்ந்ததற்கான சத்தத்துடன் கரனின் நித்திரை முடிவுக்கு வந்தது. முந்திய இரவு ஒருமணிநேர "ஒவஆபாயிட" செய்ததால் உடல்அலுப்பும் போகவில்லை. 6மணியில் இருந்து 8மணிவரை மனைவி வேலைக்கும், பிள்ளைகள் ஸ்கூலுக்கும் வெளிக்கிடும் தடல்புடல்களில் அவனுக்கு அரைத்தூக்கம், அதுவும் 9மணியுடன் அதுவும் போச்சு. எழுந்து முகத்தை கழுவி விட்டு சாரத்தையும், பெனியனையும் கழட்டி கூடையில் எறிந்துவிட்டு ஜீன்ஸையும் புல்ஓவரையும் மாட்டிக் கொண்டான் கரன்.

இப்பொழுது கடிதங்களுடன், சுப்பர்மார்க்கட், வின்ரர்உடைகள், வேறு அத்தியாவசிய தேவையற்ற ஆடம்பரப்பொருட்களின் விலை விபரப்பட்டியல் அடங்கிய செய்திப்பத்திரிகைகளையும் வாசற்கதவருகில் சென்று அள்ளிக் கொண்டு "ஸ்ருவனுக்குள்"உள்ள மேசையில் போட்டான். பின்பு தபால்களை தனியாகப் பிரித்தான். ஊர் கடிதங்கள் எதுவும் இன்று இல்லை.விலை விளம்பரத்தாள்களை ஒதுக்கி விட்டு கடிதங்களை பார்த்தான்.

கண்காட்சி வைப்பதற்கான காலவிபரத்தை ஒரு கடிதமும், வருடமுடிவு கணக்கு விபரத்தை மறுகடிதமும், வேலைக்கு திரும்பவும் வரும்படி ஒருகடிதமும் விளக்கம் சொல்லிக் கொண்டன.

வேலைக்கா? திரும்பவும் டெனிஷ்மொழியில் உள்ள கடிதத்தை படித்தான்.(அதன் தமிழ் விளக்கத்தை ஒருதரம்...) உனது சிறந்த உடல்உழைப்பை தாம் பெறுவதில் ஆர்வமாக உள்ளதாகவும், ஒருகிழமைக்கான வேலை நீடிப்பையும் தெரிவித்திருந்தது கடிதம்.

ஒரு கிழமைக்கு வேலைசெய்வதில் இஸ்டமில்லை. அவனது சிறந்த உடல் உழைப்பு எது! அதுதான் டெனிஸ்காரர்களால் ஒதுக்கப்பட்ட உடலை ஊனமாக்கும் வேலை. அதற்கு வெளிநாட்டவர்தான் அடங்கி நடப்பர். எப்படியும் நினைத்தபடி ஆட்டலாம். அவனது ஆத்திரத்தை, கோபத்தைக்காட்ட அவனுக்கான சுதந்திரம் இருப்பதாக அவனால் உணர முடியவில்லை.

'சுய்' அடிப்பதைத் தவிர அவனால் எதையும் செய்யமுடியாது. அதற்கு தகுந்தாற்போல் அவனது கைமூட்டுவலியும், தசைநார்பிடிப்பும் உதவியாக இருந்தது. எதற்கும் ஒருதரம் S.I.D க்குச் சென்று கதைப்பதை அவன் விரும்பினான்.

இங்குள்ள தொழிற்சங்கங்களில் பெரியது S.I.D. இருந்தும் வெளிநாட்டவர்களுக்கு பாகுபாடு இன்றி நடப்பார்களா தெரியவில்லை. இருந்தும் S.I.Dக்குச் செல்வது என்ற முடிவுக்கு வந்தவன் நேரத்தைப் பார்த்தான்.

11.00க்கு 5நிமிடங்கள் இருந்தன. எப்படியும் சைக்கிளில் போக முக்கால் மணிநேரம் வேண்டும். அதற்குள் சமையலை முடித்து விட்டுபோனால், வேலையால் திரும்பும் மனைவியும், பாடசாலையால் திரும்பும் பிள்ளைகளும் பசியுடன் வருவார்களே....

என்ன சமைப்பது! என்று சிறுநேரம்

* கொம்மூன்(kommune) - நகரசபை

* ஒவஆபாயிட(over arbejde) - கூடுதல் நேரவேலை



படிப்பகம்

www.padippakam.com

யோசித்துப்பார்த்தான். அவனுக்கு பட்டெனப் பட்டது புளித்தீயல்.. புளியாணம்.. எதை வைப்பது...? இரண்டுக்கும் வித்தியாசம் கரனுக்குத் தெரியாது. இரண்டையும் ருசிப்பதில் அலாதிப்பிரியம். எதற்கும் 'வளர்ப்பு மீன்'கள் மூன்றை டீபிறிச்சால் எடுத்து ஒரு தட்டில் போட்டு மிக்கிரோ புல்லியஅவுனில் 35யைத்திருப்பி 15நிமிடங்கள் வேகவிட்டான்.

என்ன இருந்தாலும் 'சூடை மங்கு' (சூடை மீனின் இளம்பராயம்)தான் புளித்தீயலுக்கு அருமையாக இருக்கும். சோளகக்காத்து உரக்க அடிக்கைமிக்கை முருங்கைக்கல்லு களுக்கு அங்காலை பாரடியில் தூண்டில் பிடிக்கும் விளைமீனில் புளியாணம் வைத் தால்.... தேவா அமிர்தமும் தோத்துப்போகும் என்று நாக்கைத் தொங்கப்போட்ட கரனை தொலைபேசி அழைத்தது. போனை எடுத்தான்.

'என்னடாப்பா கரன்! படம் எடுத்தால், அடுத்த நாள் கொண்டுவந்து தந்தால் குறைந்தா போய்விடுவாய்..?' என்றார் மணியம் மாஸ்ரர். 'மாஸ்ரர்! நானும் இரவுவேலை 3மணிக்கு போய் இரவு 12மணிக்குத்தான் வருவன். மனிசியும் வேலையால் வந்து பாக்க ஒரு நாள், நான் பாக்க ஒரு...', 'இடைமறித்து தம்பி கரன் படக்கொப்பி 5குறோன். இரண்டு நாட்கள் வைத்திருக்கின்றதெண்டால் 10 குறோன் தந்துவிட்டுபாருங்கோவன்' என்றார் மணியம் வாத்தியார்.

'சரி மாஸ்ரர் இரண்டு வீடியோக் கொப்பியும் 20குறோன்களும் கொண்டுவந்து தாறன்' என்றுகூறி போனை வைத்தான் கரன். என்ன படம் பாக்கிற பிழைப்பும் இப்படி பிரச்சனை யாக இருக்கு.வயித்திலை பம்பரம் விடுகி றதுக்கு 5குறோன் காணாது 10 குறோன் கொடுக்கவேணும்.

தமிழர்களுக்கு அன்னியப்பட்ட, கற்பனா வாழ்க்கையை காட்டுறாங்கள். இங்குள்ள கலாச்சாரத்துக்கும் எட்டாத, எங்களின் அன்றாட வாழ்க்கைக்கு பொருந்தாத ஒரு கற்பனா நிலையில்தானே தமிழ்நாடு கோடம்பாக்கத்து தமிழ்சினிமா! காசுவிடுபவன் தான் நினைத்ததைத்தானே கூறுவான். இதை மீறி கலாச்சாரம், மனிதம், மனிதநேயம்... என்று கூறுபவர்களும் தமது அரைமுழத் துண்டால் ஒரு அச்சா சட்டை தைத்து போட்டுவிட்டு..... என்று எண்ணிப் பெரு மூச்சுவிட மிக்கிரோபுல்லிய அவுனும் நேரம் முடிந்து மணியடித்து நின்றது.

வளர்ப்புமீனை வெளியில் எடுத்து பலகையில் வைத்துவிட்டு, குசினி மேசையை ஒரு முறை கைசறுக்கி கத்தியால் கீறியதை மனதுக்குள் நினைத்துக் கொண்டான். கிச்சின் மேசையில் இருந்த பைப்பில் ஒரு தரம் வளர்ப்புமீனைக் கழுவியெடுத்தான். செதிள் போகவில்லை என்று கம்பி வலை யால் உரஞ்சினான். அது சம்போபோல் நுரைக்கத் தொடங்கியது.

ஊரில் எண்டால் காலுக்கை ஒரு கத்தியை வைத்து நாலு இழுவை, செதிள் பறக்கும். நாலுதுண்டமாக விளைமீனை வெட்டிப் போட்டு புளியாணம்....வேண்டாம். இந்த வளர்ப்புமீனும் லக்ஸ்மீன் குடும்பத்தைச் சேர்ந்தது தானே. இந்த வழுவழுப்புத்தான் பிரச்சனை. ஒருகிலோ 20குறோன் தானே. மலிவெண்டால் கரனுக்கு மட்டுமல்ல....... இரண்டு, மூன்று தரம் கழுவியதும் மீன் நன்றாக வெள்ளை வெளீரென துலங்கியது.

மீன்களை குறுக்காக ஆறு,ஏழு துண்டு களாக வெட்டிவிட்டு,வெட்டிய துண்டுகளை புளியாணத்துக்கும்,பொரியலுக்குமாக பிரித்து பொரியலுக்கான மீன் துண்டுகளை உப்பு, மிளகாய்த்தூள் போட்டு ஒரு பிரட்டுபிரட்டி வைத்துவிட்டு, புளியாணத்துக்கான மீன் துண்டுகளை ஒரு சட்டியில் போட்டு பழப் புளியைக் கரைத்து அளவாக விட்டான். அத்துடன் நாலைந்து பச்சை மிளகாயையும் பிளந்துபோட்டு, கொஞ்சம் உப்பும்போட்டு ஒருகலக்கு கலக்கி விரலால்தொட்டு நாக்கில் வைத்துப் பார்த்தான். எல்லாம் கணக்காக இருந்தது. அடுப்பில் ஏத்திவிட்டு, றைஸ் குக்கரில் அரிசியைப்போட்டு நடுவிரல் முதல் வரை அளவுக்கு, அளவாக தண்ணியை விட்டு றைஸ்குக்கரை இயங்க விட்டான். நேரம் 12மணி ஆகிறது.

வீட்டில் எண்டால் அப்பாச்சி பனைஈக்கில் பச்சைமிளகாயையும், வெண்காயத்தையும்

---

* சூய்(syg) - சுகவீனம்



படிப்பகம்

www.padippakam.com

குத்திப்போட்டு விளைமீனோடை சேர்த்து அவியவிட்டு, அவிந்தபின்பு சட்டியால் பச்சை மிளகாயையும் வெண்காயத்தையும் ஒருசட்டியில் போட்டு அகப்பையால் ஒரு மசிமசிச்சு திரும்பவும் கறிச்சட்டியில்விட்டு, ஒருகலக்கு கலக்கிவிட்டு, இறக்குவா....... அப்பாச்சியும் இல்லை; இங்கை அந்த விளைமீனும் இல்லை; என்ன இருந்தாலும் அவனுக்கு சமைப்பதில் அலாதிபிரியம்; இப்போது இந்த இயந்திர வாழ்க்கையில் அன்றாடவேலைகளை பகிர்ந்து கொள்ளுவதிலும் தான். நாலு, ஐந்து வருடங்களுக்கு முன்பு சமைப்பதென்றாலோ, வீட்டில் வேறுவேலைகள் செய்வது என்றாலோ அவனுக்கு நரகலில் மிதித்தது போல் ஒரு உணர்வு. அப்போது அவன் பிரமாதமாக பெண்ணியம் பற்றி நிறையக் கதைப்பது உண்டு.....

கறிச்சட்டியை திறந்து பார்த்தான்; வெட்டப்பட்ட மீன் தலையிலிருந்து கண்கள் வெளியே வந்து இருந்தன. மீன்துண்டுகள் அவிந்துவிட்டன என்று நினைத்தாலும் ஒரு துண்டை எடுத்து சுடச்சுட தின்று பார்த்தான். இன்று புளியாணம் நன்றாகவே இருந்தது.

நேரம் பன்னிரண்டரை. கறி அடுப்பை நிறுத்திவிட்டு, S.I.Dக்கு போய் விட்டுவந்து, சாப்பிட்டு விட்டு வேலைக்கு போகலாமென நினைத்தான். மணியம்வாத்தியின் வீடியோ படக்கொப்பி இரண்டையும் தனது தோள் பாக்கில் வைத்துவிட்டு யக்கற்றை எடுத்து மாட்டி, கழுத்தை துண்டால் நன்றாகச் சுற்றிக்கொண்டு யக்கட்ஜிப்பை கழுத்துவரை இழுத்துவிட்டு தோள்பையை எடுத்துக் கொழுவிக் கொண்டான். கைக்கிளவுசை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே இறங்கியவன் வாசல் கதவை இழுத்து சாத்தினான். தானாகவே கதவு பூட்டிக் கொண்டது.

சைக்கிளை நாலு மிதி எட்டி மிதித்தான். சைமிக்கிள் பனிக்குளிரில் வேகமாக விரைந்தது. வாயாலும்,மூக்காலும், புகை பிடிப்பதுபோல் ஆவி வெளியேறிக் கொண்டிருந்தது. மூக்கு நுனியிலும், மீசையிலும் நீர்த்துளிகள் பெருகிக் கொண்டு சொட்டிவிட்டன.சளியை ஒருகையால் துடைத்தபடி பெரும்வீதியைத் தாண்டினான். சைமிக்கிள் பாதையருகிலுள்ள "போணகாவ்" வில் பிள்ளைகள் பனியில் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளுக்கு பனியில் விளையாடுவது என்றாலே அலாதிப் பிரியம் தான். அவனுக்கு அவ்வளவாக விருப்பமில்லை. நாலு சைமிக்கிள் ஓட்டிகள் முந்திக்கொண்டு போனார்கள். இன்னும் பலர் அவனுக்கு எதிர்திசையில் வந்து மறைந்தனர்.

மூக்கின் நுனியிலும், மீசையிலும் குளிரில் அவன் வெளியேவிழும் மூச்சு நீர்த்துளிகளாக கட்டிச்சொட்டுவிட கோகேதவை அடைந்தான். "கோகேத"வின் ஆரம்பத்தில் உள்ள சைமிக்கிள் நிறுத்தும்இடத்தில் சைமிக்கிளை அவசரமாக நிறுத்தினான். யக்கட்பையில் இருந்த துண்டை எடுத்து மூக்கைச் சீறி மீசையைத் துடைத்துக் கொண்டு, S.I.Dயை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

கோகேதவில் உள்ள "கிறாதமூவா" சிலையை அண்மிக்கிறான் கரன். அங்கே சுவர் இன்று அழவில்லை. கண்கள் துளிகளாக வளியும் நீர் உறைந்து விட்டது. தண்ணீர் தேங்கி நிற்குமிடத்தில் தண்ணீர் கண்ணாடியாக உறைந்திருந்தது. அதன் மேல் 6–7வயதுக் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன.

அக்குழந்தைகளில் அத்திபூத்தாற்போல் ஒரு தமிழ் குழந்தையும், இன்னொரு துருக்கி குழந்தையும் விளையாடிக் கொண்டிருந்தன. அந்த தமிழ்குழந்தை மாமா! மாமா!! என்று கரனை அழைத்தது. அக் குழந்தைக்கு "ஹாய்" கூறிவிட்டு அவர்களையும் கிறாத மூவவையும் கடந்து அங்கால் சென்றிருப்பான்.

கவனமாக....விளையாடும்படி ஒரு பெடக்கோ குழந்தையைப் பார்த்து கத்துவது மட்டும் அவன் காதில் விழுந்தது. அதேஇடத்தில் அடிக்கடி ஒரு கிழவனும்,கிழவியும் "கருப்பா வீட்டுக்குப் போ!" என அவன் காதில்வந்து மெல்லக் கூறுவதுண்டு. அவனும் பதிலுக்கு "நான் கருப்பு அல்ல, மண்ணிறம்" என்று கூறுவதுண்டு. கருப்பா என்பதை இன்னும்

---

* கோகேத(gå gade) - கடைத்தெரு நடைபாதை
* கிறாத கேத (græder mur) - அழும் சுவர்
* பில்கா, OBS - கப்பமார்க்கட்டுகளின் பெயர்.
* போணகாவ் – பிள்ளைகளைப் பராமரிக்குமிடம்



படிப்பகம்

www.padippakam.com

அழகாக கருப்பு பண்டியே வீட்டுக்கு போ!! என்றும் கூறுவதுண்டு. அதற்கும் நீ அவிந்த பண்டி! நான் பிறவுண்பண்டி!! என்று பதில் கூறிச்செல்வதுண்டு. குழந்தைக ளின் விளையாடும் சத்தம் குறைந்து கொண்டு போனது.

எதிர்திசையில் இருந்து நரைத்து வெளிறிய யக்கற் அணிந்து ஒரு தமிழர் வருவது அவன் கண்களில் தெரிந்தது.

அது "மூக்குப்பேணி" தான் என்று அவன் போட்டிருந்த யக்கற் கரனுக்கு அறிவித்து விட்டது. அந்த மனிதனும் இரண்டு கைகளிலும் பிளாஸ்டிக் பையில் நிறை சாமான்கள் வாங்கிக் கொண்டு வருகிறான். கரன் அந்த மனிதன் எதிர் கொண்டு தாண்டும்போது "குடே"என்று கூறி தலையை ஆட்டினான். கரனால் குடே சொல்லுவதில் இஸ்டம் இல்லாவிட்டாலும் தலையை மட்டும் ஆட்டிவிட்டு அவனைத் தாண்டி S.I.Dநோக்கி எட்டி நடக்கலானான்.

வழமையைவிட இப்போது சனநடமாட்டம் அதிகமாவே உள்ளது. வின்ரர்விடுமுறையாத லால் ஜேர்மன்ரூறிஸ்டுகள் அதிகமாகவே கடைத்தெருவில் காணப்பட்டனர். "கைஸ்கூல்" பொடியள், பெட்டையள் தமக்குரிய உடை களில் கடைத்தெருவில் அங்கொன்றும், இங்கொன்றுமாக சிதறி நடந்து கொண்டிருந்தனர்.

சாமூவேல் கரனிடன் முதுகில் தட்டினான். "என்ன கரன் நான் எதிரில் வருவதும் தெரியாமல் வேகமாக!" "இல்லையடா சாமுவேல் யோசினை கூடிப் போச்சு!" என்றான். "என்ன யோசினை...." கரனுக்கு மூக்குப்பேணியின் விடயத்தை சாமுவேலுக்கு சொல்லுவதில் அவ்வளவு இஸ்டமில்லை. "ஒன்றுமில்லை" என்றான்.

"சும்மா யோசித்து என்ன பயன் பில்காவுக்கும் Obsக்கும் இப்பநல்ல போட்டி நடக்குது. இந்தப்போட்டியில் சின்ன சுப்ப மார்க்கட்டுகள் மூடப்படுகுது. இப்ப லூபியா மூடப்போறாங் களாம். சாமான்கள் எல்லாம் அரைவிலையாம் கரன். எதுக்கும் நீயும் ஒருக்கால் லூபியாவுக்கு போ" என்றான் சாமூவேல். கரனும் தலையாட்டினான். சாமூவேல் கடைத்தெருவில் உள்ள குறுக்கு வழியால் விழுந்து லூபியாவுக்கு ஒடுகிறான்.

"மூக்குப்பேணி" திரும்பவும் வழக்குக்கு வருவதுபோல் கரனுக்குப் பட்டது. காணி வழக்குமல்ல, கடன் பிரச்சனையுமல்ல; ஒரு நாள் கலைவிழாவில் சிறுகுழப்பம்.

அப்போது "உதுகளை வைக்கவேண்டிய இடத்திலை வைக்கவேண்டும்" என்றான் மூக்குப்பேணி. "என்ன கதைக்கிறியள்?, எனக்கு விளங்கவில்லை" என்றான் கரன்.

இல்லைத் தம்பி கண்ட கண்ட....துகள் "வீட்டுக்கும் வருகுதுகள் வந்தால் தேத்தண்ணி, கோப்பி கொடுக்க தனியாகவே கிளாஸ் வைத்திருக்கிறன்" என்றான் மூக்குப்பேணி.

கரன் எதுவும் பேசவில்லை; நிகழ்ச்சிகளைப் பார்ப்பதுபோல் பாவனை செய்துகொண்டான்.

மேடையில் மூக்குபேணி காட்சி அளிக் கிறான். 60பதுகளில் யாழ் குடாநாட்டு தேனிர் கடைகளில் தேனீர் கொடுக்கும் மூக்கு பேணிகளால் செய்யப்பட்ட மாலையுடன். என்ன இருந்தாலும் எமது தமிழ் சைவப் பாரம்பரியத்தின் பெருமையை மறுக்கவா முடியும்...

"டேய் கருப்பா நில்! டே கறுப்புப்பண்டி நில்!" சிலர் கூப்பிடுவதுபோல் கரன் உணரு கிறான். திரும்பிப் பார்க்கிறான். மூக்குப் பேணியும் தூரத்தில் வீழ்ந்து கிடக்கிறான். அவன் கொண்டுவந்த சாமான்கள் நிலத்தில் சிதறி விழுந்து கிடக்கின்றன.

அவனைக் கடந்து சில மொட்டைகள், லெதர்யக்கற் அணிந்தவர்கள் கரனை நோக்கி ஒடி வருகிறார்கள். இண்டைக்கு வைத்த புளியாணத்துக்கு வாழ்மானம்தான் என்று நினைத்தபடி ஓடத் தொடங்கினான். அவனால் ஒடமுடியவில்லை. மறுதிசையால் வந்த மொட்டையன் இரும்புக்கம்பியால் தாக்கிவிட்டான். கரனும் நிலத்தில் விழுகின்றான்.

■

* பில்கா, OBS - சுப்பமார்க்கட்டுகளின் பெயர்.
* குடே - வணக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# தாய்மொழி தமிழா?

க. இலங்காதிலகம்

"தமிழுக்கு அமுதென்று பெயர்" என்று புரட்சிக்கவி பாரதிதாசனார் கூறினார். அமுதை உண்டவர் சாகாவரம் பெற்று வாழ்பவர்கள் என்பது மரபுவழி. தமிழும் அதைப்போல், பல மொழிகளை வாழவைத்து தானும் வாழ்கின்றது என்பது பல அறிஞர்களின் கருத்து.

தமிழ்மொழியின் தன்மையை நாம் சிறிது ஆராய்வோமாயின், தமிழ்மொழியானது பேசவும், எழுதவும், பெரும் இலக்கியவளமுடையதாகவும். மக்களை சீர்திருத்தும் பண்புடைய தத்துவங்களைக் கொண்டதாகவும். இயற்கைச்சக்தியுடையதாகவும் உள்ளது. இப்படியான மொழிவளமுள்ள மொழிகள் உலகில் 10–15ற்கு மேல் இல்லை என்பது மொழி வல்லுனர்களின் கணிப்பு. தமிழும் இம்மொழிகளில் ஒன்று என்று எண்ணும்போது "தமிழனாய் பிறந்திட நல்ல மாதவம் செய்திட வேண்டுமைய்யா" என்று அடியெடுத்துப்பாட எனக்கு உணர்வு எழுகின்றது.

உலகில் எத்தனையோ மொழிகள் அழிந்துவிட்டன. காரணம் அவைவெறும் பேச்சு மொழியாகவே இருந்தன. உதாரணமாக மெக்சிக்கோ மக்களை எடுக்கலாம். இங்கிலாந்தில் வேல்ஸ்மொழி அழிந்துவிட்டது என்று கூறுமளவுக்கு ஆங்கில மொழியின் மேல் ஓடிவிட்டது. பேச்சுமொழியாகவும் எழுத்துமொழியாகவும் இருந்ததுடன். மற்றய ஏனைய வளங்கள் இல்லாததும் இந்த அழிவிற்கு ஒரு காரணமாகும். வேல்ஸ்மொழிக்கு உயிரூட்ட பல அறிஞர்கள் இன்று பிரம்மப் பிரயத்தனம் செய்கின்றனர் அங்கு.

ஆதி மனிதன் மிருகங்களோடு வாழ்ந்து. மிருகங்களை வேட்டையாடி, தூக்கம் வரும்போது தூங்கியும்; கால் போனபோக்கில் நடந்தும்; தரையிலும், கல்லிலும், குகையிலும் வாழ்ந்துவரும் வேளையில், அவன் தன் உணர்வுகளை வெளிக்காட்ட விரும்பினான். இதன் விளைவாக கல்லிலும், குகைகளிலும் சித்திரம் வரைய தொடங்கினான்; இதன் மூலமாக தன் உணர்வுகளைக் கருத்தெழுத்தாக்கினான்; சித்திர எழுத்து கருத்தெழுத்தாக பிரமாணித்தது. இத்தோடு அவன் முயற்சி நின்று விடவில்லை. மிருகங்களின் ஒலியைக்கேட்டு தானும் அப்படி ஒலியெழுப்பினான். மிருகங்களைப்போல், பறவைகளைப்போல் துள்ளினான்; ஓடினான்; சுழன்றான். ஒலியானது அவன் உணர்வுகளைக் காற்றோடு கலந்து மிடறுவழியாக பேச்சாக பெருக்கெடுக்கச் செய்தது– பேச்சுமொழி பிறந்தது. அதாவது ஒலிமொழியே எழுத்து மொழியாகி(எழுத்து வடிவம் அமைத்தல்). எழுத்துக்கள் சொற்களாகி. சொற்கள் வசனமாகியது. தமிழன் காக்கையைப் பார்த்தான்; அது "கா கா" என்றது; கா..கா.. என்று ஒலியெழுப்பினான்; காகா என்று பெயர் சூட்டினான்; அது பின்பு காக்கா என்று மாறி காக்கை, காகம் ஆனது.

தமிழ் மொழிக்கு ஓரெழுத்துச் சொல்வடிவம், ஈரெழுத்து இணைந்த சொல்வடிவம், இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் இணைந்த சொல்வடிவம் என்று மூவகையாகப் பகுத்துக்காட்டி இலக்கணஇலக்கியங்களை வகுத்தும் அருளியவர் 5000வருடங் களுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியனார் ஆவார். தொல்காப்பியனார் மூவகையாகப் பகுத்துக்காட்டிய எழுத்து வகைச் சொல்வடிவங்களை 1000வருடங்களுக்கு முன்பு நன்நூலார் பகுசொல்(ஓரெழுத்தொருமொழி) எனவும். பகாச்சொல்(தொடரெழுத்தொரு மொழி) எனவும் இருவகை எழுத்துச்சொல் வடிவங்களாக அருளினார். ஆய்த எழுத்தான "ஃ"த்துடன் 247 தமிழ் எழுத்துக்கள் உதயமாகின. இன்று இவை எழுத்துச்சீர்திருத்தத்தாலும் கம்பியூட்டர் வருகையாலும் சிறுமாற்றம் கண்டுள்ளது. மொழியின் சிறப்பையும், மொழியின் வளர்ச்சியையும் பற்றி சிறு மேலோட்டம் விட்டோம். இனி புலம்பெயர்ந்தநாட்டில் ஒருபிள்ளையின் தாய்மொழி எது என்பதற்கு வருவோம்.



படிப்பகம்

www.padippakam.com

காகம்

## அடுத்தஇதழில்

.......................................................

H.C.Andersen கதை

.......................................................

ஆதவனின்பார்வையில் சினிமா

.......................................................

உச்சம் என்பது – சிறுகதை

.......................................................

மனதோடு பேசுதல் – கவிதை

.......................................................

மலர்தல் வாடல் தெரிதல் – அனுபவம்

.......................................................

தோப்புக்கரணங்கள் – குறுநாவல்

.......................................................

தாய்மொழி....தமிழா? – கட்டுரை

.......................................................

தமிழின்நிலை

.......................................................

"கூட்டுக்குடும்பம்" .........விவாதம்

.......................................................

இளைஞர்பக்கம்

.......................................................

மரணத்தின்பின்.......- கட்டுரை

.......................................................

கவிதைகள்

.......................................................

மற்றும் பல.......................................

.......................................................

■ உங்கள் படைப்புக்கள், அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்; எல்லோரும் வளர.....

## காகம்

*முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்*
*எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.*
*– ஒரு தாய்*


"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 4 – சித்திரை. 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12

விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200 டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16-18
Postboks 255
3400 Hillerød Denmark
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு. ரவி......TlF: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு. செல்வன்........TlF:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம் தமயந்தி


.......................................................

**படைப்பாளிகள் கவனத்திற்கு.............**

**தங்கள் படைப்புக்களை தெளிவாகவும், தாளின் இரண்டு பக்கங்களிலும் எழுதுவதை தவிர்த்தும் எழுதி அனுப்புங்கள். கிறுக்கல்கள், வெட்டுகளையும் கூடியவரை தவிருங்கள்.**

**நன்றி!**

■ சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பாளிகளாவர். காகத்தின் எண்ணங்களை படைப்பாளிகள் பிரதிபலிக்க வேண்டுமென்பதில்லை.

■ ........................காகம்........................



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Til: Chanchive
Danmarksgade 10
7500 Holstebro

"Postbesørget blad (0900 KHC)" 51033

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்